6-வார, வீட்டுப்பாடமற்ற வேதப்பாடம்

7 லட்சத்திற்கும் மேலான பிரதிகள் விற்பனையில்

# பலனுள்ள ஜெபத்திற்கு அவசியமானவை எவை?



கே. ஆர்தர், டேவிட் & பி.ஜெ. லாசன்

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

40 நிமிட வேத பாடம்

40 நிமிட வேத பாடம்

# பலனுள்ள ஜெபத்திற்கு அவசியமானவை எவை?

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

கே. ஆர்தர்
டேவிட் & பி.ஜெ. லாசன்

THE ESSENTIALS OF EFFECTIVE PRAYER (TAMIL)

PUBLISHED BY

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
P.O.Box 7707, Borivali (West), Mumbai - 400 092
Tel. No. +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

Translator : Mrs. Kamala Joyce D.

WITH PERMISSION FROM
WATER BROOK PRESS
12265 Oracle Boulevard, Suite 200
Colorado Springs, Colorado 80921

ISBN 978-0-307-45770-7

Copyright © 2007 by Precept Ministries International

*All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying and recording, or by any information storage and retrieval system, without the written permission of the publisher*

Printed in India
September, 2015

Printed by :
*Printed at:*
**Ebenezer Printing House,**
Dadar, Mumbai- 400028
Tel: (022) 24462632 / 3872 Fax: (022) 24449765
E-mail: outworkeph@gmail.com

## பிரிசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா

மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுதல்

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA

THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

பிரிசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா என்பது பிரிசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனலின் ஒரு அங்கமாகும். வேதாகமத்தை ஆழமாக கற்பதின் மூலம் மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுவதில் இது ஈடுபட்டுள்ளது.

### குறிக்கோள்

மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டுவது.

### தரிசனம்

தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டப்பட்ட மக்களை பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் உயர்வான மாதிரிகளாகவும், வேதாகமத்தை ஆழமாக கற்பவர்களாகவும், வேதாகமக் கண்ணோட்டத்தில் உலகத்தை நோக்குகிறவர்களாகவும், சீஷர்களை உருவாக்கும் இலக்கு உடையவர்களாகவும், திருச்சபைக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களாகவும் வாழச்செய்தல்

**Contact**

**PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA**

for more information about Inductive Bible Studies in your area.

Precept Ministries Society Of India
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.
Tel.No- +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

## இந்த வேத பாடத்தை பயன்படுத்துவது எப்படி?

வேதம் கூறுவதை சுயமாகக் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள, ஆனால் ஒன்றுகூடிவர மிகவும் குறைவான நேரமே உள்ள மக்களுக்கு இந்த "சிறு-குழு கற்றல் முறை" மிகவும் ஏற்றது. உதாரணத்திற்கு, வேலை நேரத்தில் மதிய உணவு இடைவெளியில் கூடும் குழுக்கள், அதிகாலை நேர ஆண்கள் கூடுகை, பெண்கள் வீட்டு ஜெபக்குழு கூடுகை, ஞாயிறு பள்ளி வகுப்பு, மற்றும் குடும்ப தியான வேளையில் பயன்படுத்த இது ஏற்றது. (மேலும் நீண்ட நேரம் செலவிடும் சிறு குழுக்களுக்கும் - அதாவது மாலை நேர குழுக்கள், சனிக்கிழமை குழுக்கள் ஜெபிக்கவும், ஐக்கியத்திற்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு, வேத பாடத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் குழுக்களுக்கும் இந்த முறைமை ஏற்றது)

- குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் கூடிவரும்போதே ஒவ்வொரு பாடத்தினுடைய கற்றல் செயல்முறைகளையும் ஒரே நேரத்தில் முடிக்கும்படி இந்தப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இது ஒரு குழுவாக கற்கும் முறையாக இருந்தாலும், கற்கவும் கலந்துரையாடலை நடத்திச் செல்லவும், உங்களை வழிநடத்த ஒரு உதவியாளர் தேவைப்படுகிறார். இவரின் செயல்பாடு விரிவுரையாற்றுதவதோ, போதிப்பதோ அல்ல. எனினும், இந்த புத்தகம் ஞாயிறு பள்ளி வகுப்பு மற்றும் அதைப்போல் செயல்படும் குழுக்களில் பயன்படுத்தப்படும்போது, போதிப்பவர் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வார பாடத்தோடு தன் உட்கருத்துகளையும் நேரடியாகப் போதிக்கலாம்.

- நீங்கள் உங்கள் குழுவின் உதவியாளராக, தலைவராக இருப்பின் உங்கள் வேலையை எளிதாக்க உதவிடும் குறிப்புகள்:

- நீங்கள் உங்கள் குழுவை நடத்தும் முன்பதாக, பாடத்தை வாசித்து அதில் அடையாளமிடவும். இது பாடத்துடன் நன்கு அறிமுகமாகிக்கொள்வதோடு, மிக எளிமையாக குழுவை நடத்த உதவும். புத்தகத்தில் சொல்லப்பட்டபடி அடையாளக் குறியீடுகளை இடுவது குழுவை நடத்தி செல்ல எளிதாக்கும். நீங்கள் குழுத்தலைவராயின் ஒவ்வொரு குறியீட்டிற்கும் குறிப்பிட்ட வண்ணத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

- நீங்கள் குழுவை நடத்தும்போது, பாடப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தே அதிலுள்ளதை சத்தமாக வாசியுங்கள். பாடத்தின் முன்பு அல்லது பின்பு அல்லது இடையில் வரும் "உட்கருத்துக்களையும்" (Insight Box) பாடத்துடன் சேர்த்து வாசியுங்கள். நீங்கள் இணைந்து

உற்றுநோக்கி, கற்றுக்கொண்டதை கலந்துரையாடுங்கள். வேத வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, குழுவினர் அடையாளமிடும் வார்த்தையை சத்தமாக சொல்லச்சொல்லுங்கள்.

- கலந்துரையாடல் கேள்விகள் முழு பாடத்தையும் படித்து முடிப்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. வகுப்பு கலந்துரையாடலுக்குள் கடந்து செல்லும்போது, அநேக வேளைகளில், அவர்களே கேள்விகளை புரிந்துகொண்டு கலந்துரையாடுவார்கள். நினைவில் கொள்ளுங்கள், கலந்துரையாடல் கேள்விகள் குழுவை தலைப்பை நோக்கி நடத்திச்செல்லவே கேட்கப்படுகிறது. கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவர அல்ல.
- ஒவ்வொருவரும் தங்கள் பதில்களையும், கண்டுபிடிப்புகளையும் வாய்மொழியாக சொல்வது முக்கியமானது என்று நினைவில் கொள்ளுங்கள். இது ஒவ்வொரு வார பாடத்திட்டத்தில் அவர்களின் தனிப்பட்ட புரிந்துகொள்தலை மிகவும் வலிமையாக்குகிறது. ஒவ்வொரு வார பாடத்தின் கலந்துரையாடலிலும் ஒவ்வொருவரும் பங்குபெறும்படி போதுமான அளவு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடல் நகர்ந்து செல்லட்டும், கற்கும்போது அவசியமான இடங்களில் சற்று நேரம் அதிகமாக செலவழிக்கலாம் என்பதே இதன் பொருள். தேவைப்பட்டால், பாடத்தை ஒரு கூட்டத்தொடருக்கும் மேலாக தொடர்ந்து எடுத்துக்கொண்டு செல்லலாம். எனினும் செல்லும் வேக அளவை மிகவும் குறைத்துவிட வேண்டாம். ஏனெனில் உற்சாகம் குறைவதால் மக்கள் விட்டுவிடுகின்ற பகுதியில் நேரம் செலவிடப்படுவதைவிட, குழுவினர் எல்லாரும் “அதிகமாக விரும்பும்” பகுதிக்கு கொண்டுசெல்வதே நல்லது.
- சில பதில்கள் தகுதியானதும், சரியானதும் என்பது கேள்விக்குரியதாயிருப்பின், நீங்கள் மென்மையாகவும் மகிழ்ச்சியுடனும் குழுவினருக்கு வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கு நேராகவே கவனம் இருக்கும்படி நினைவுபடுத்துங்கள். உங்கள் முக்கிய நோக்கம் வேதம் என்ன சொல்லுகிறது என்பதை கற்றுக்கொள்வதே, மனித தத்துவங்களோடு ஒன்றிபோவது அல்ல. உண்மையில் வேதவாக்கியங்களை வாசித்து, ஒவ்வொருவருக்கும் அவருடைய பதிலை காட்டும்படி தேவனைக் கேளுங்கள்.

# பலனுள்ள ஜெபத்திற்கு அவசியமானவை எவை?

நீங்கள் ஜெபிக்கிறீர்களா?

உண்மையாகவே நீங்கள் ஜெபிக்கிறீர்களா? எந்த நேரங்களில் (எப்படிப்பட்ட இடைவெளியில்)? உங்கள் ஜெபம் எப்படிப்பட்ட வல்லமை (பலன் அளிக்க கூடியது) உடையது?

உங்கள் ஜெபவாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டுமா? என்று நீங்கள் உங்களை கேட்டிருக்கிறீர்களா? தேவன் மக்களின் ஜெபத்திற்கு இன்னமும் பதிலளிப்பதைக் கண்டு எப்போதாவது ஆச்சரியப்பட்டதுண்டா? உண்மையான ஜெபம் என்பது என்ன என்று புரியாமல் நீங்கள் கவலைப்பட்டிருக்கிறீர்களா?

இந்தக் கேள்விகளை நீங்கள் உங்களைத்தானே கேட்டிருப்பீர்களானால் நீங்கள் தனிமையானவர்கள் அல்ல. உண்மையான ஜெபம் என்பது என்ன என்றோ, எப்படி ஜெபித்தால் பலன் கிடைக்கும் என்றோ, ஜெபத்தின் உண்மையான செயல் என்ன? என்றோ நம்மில் பெரும்பான்மையினோர் சில நேரங்களில் கேள்வி கேட்டிருக்கிறோம்.

இந்த போதனையின்போது வேதவசனம் ஜெபத்தைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதை ஆராய்வதின் மூலமாகவும் அந்த சத்தியங்களை நம் வாழ்வில் எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்று யோசிப்பதன் மூலமாகவும் இந்த கேள்விகளுக்கு நாம் பதிலைக் கண்டு கொள்ள முடியும்.

மேலும் ஜெபத்திற்கும் தேவனை பிரியப்படுத்துதலுக்கும் இடையேயுள்ள தொடர்பை கண்டறியலாம். “ஒரு ஜெபிக்கின்ற மனிதன் செய்வது என்னவென்றால் தன்னுடைய சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு இணையாக கொண்டுவருதல்; அதனால் தேவன் தான் செய்ய நினைத்ததை செய்ய முடியம்”[1] என்று தன் ஜெபத்தின் வல்லமையை அறிந்துகொண்ட A.W.டோசர் என்பவர் கூறுகிறார்.

அடுத்த ஆறு வாரங்களில் நம்முடைய சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு இணையாக கொண்டுவருவது எப்படி என்று நாம் கற்றுக்கொள்ளலாம். இந்த போதனையின் முடிவில் உங்கள் ஜெபவாழ்க்கை முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு எழுச்சியுடையதாகவும் துடிப்புடையதாகவும் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

# வாரம் ஒன்று

ஜெபமானது தேவனோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று நமக்கு தெரியும். ஆனால் உண்மையாக ஜெபம் என்ன செய்வதாக தோன்றுகிறது? ஜெபத்தின் முக்கிய கருத்து என்ன? சர்வவல்லமை உள்ள தேவன் உண்மையாகவே எல்லோரிலும் மேலானவர், நாம் அக்கறைக் காட்டும் காரியங்களில் கரிசனை கொள்கிறாரா? அப்படி அவர் செய்கிறார் என்றால், நாம் அவரை எப்படி நெருங்க வேண்டும்? நாம் அவரிடத்தில் எவைகளைக் குறித்து கேட்கவேண்டும் அல்லது அவரிடம் எதைக் குறித்துப் பேசவேண்டும்?

இந்த வாரம் சில ஜெபமனிதர்களைக் குறித்து ஆராய்வதின் மூலமாகவும், வேதத்திலுள்ள ஜெபங்களை மேற்கோள் காட்டுவதின் மூலமாகவும் ஜெபத்தின் பண்பினையும், நோக்கத்தையும் புரிந்துகெள்ள நாம் முயற்சிக்கலாம்.

## உற்றுநோக்கு

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு தன்னுடைய புதிய ஏற்பாட்டு நிருபத்தில் பழைய ஏற்பாட்டிலுள்ள மேன்மையான ஒரு ஜெபமனிதனாகிய எலியாவைக் குறிப்பிடுகிறார்.

தலைவர்: சத்தமாக, யாக்கோபு 5:16 - 18 வரை வாசிக்கவும். குழுவில் உள்ளவர்கள் 'ஜெபம்' என்று வருகிற இடத்திலும் 'ஜெபம் பண்ணினான்' என்று வருகிற இடத்திலும் சத்தமாக வாசித்து "ஜெ" என்று குறிப்பிடவும்.

வேதபகுதியை நீங்கள் வாசிக்கும் போது, குழுவினர் முக்கிய வார்த்தைகளை சத்தமாக வாசிப்பது குழுவில் உள்ளவர்கள் அவ்வார்த்தைகளை குறித்துக்கொள்ள உதவியாயிருக்கும். அப்படி செய்வதினால் ஒவ்வொருவரும், முக்கிய வார்த்தை வரும் எல்லா இடங்களையும், வார்த்தையின் அர்த்தத்தையும், அல்லது சொற்றொடர் களையும் குறித்துக் கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும். வேதபாடம் முடியும் வரை இவ்வாறே செய்யவும்.

**யாக்கோபு 5 : 16-18**

16. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா-யிருக்கிறது.

17. எலியா என்பவன் நம்மைப் போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

18. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் 'ஜெபம்' என்று கூறப்பட்டுள்ள இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன?
- எலியாவைப் போன்ற அனுபவம் எப்போதாகிலும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா? உங்கள் ஜெபங்கள் பெரிதாக சாதித்துவிட்டதாக உணருகிறீர்களா? பதிலை விளக்கவும்.
- எலியா நம்மைப் போன்ற மனிதனாக இருந்தாலும் அவருடைய ஜெப வாழ்க்கை நம்மில் அநேகருடைய ஜெபவாழ்க்கைக்கு வேறுபட்டதாக இருந்தது. இது ஒரு சிறிய பயத்தை உண்டாக்குகிறது அல்லவா?

அடுத்த ஆறுவாரங்களில் நம்முடைய ஜெபவாழ்க்கையை எலியாவின் ஜெபவாழ்க்கையைப் போல எது நம்மை மாற்றக்கூடும் என்பதைக் குறித்து பார்க்கலாம்.

**1 இராஜாக்கள் 8:27-30, 38-40**

27. தேவன் மெய்யாக பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?

## உற்றுநோக்கு

இஸ்ரவேலின் மூன்றாவது இராஜாவாகிய சாலமோன் முதன்முதலில் கட்டப் பட்ட எருசலேம் தேவாலயத்தின் பிரதிஷ்டையின் போது ஏறெடுத்த ஜெபத்தை பார்ப்போம்.

தலைவர்: 1 இராஜாக்கள் 8 : 27-30, 38-40 பகுதிகளை வாசிக்கவும்.

- அப்போது குழுவில் உள்ளவர்கள் 'சாலமோன்' என்று வரும் இடங்களில் சத்தமாக வாசித்து அந்த இடங்களில் "சா"

என்று குறிப்பிடவும். இந்த பகுதியில் சாலமோன் பேசுகிறதினாலே இவரைக் குறிக்கும் பெயர்கள், சாலமோன் என பொருள்படும் சொற்கள் மற்றும் "உமது அடியேன்" என்று வரும் இடங்களை கவனமாக பார்க்கவும்.

- 'ஜெபம்' என்று வரும் இடங்களிலும் ஜெபத்தைக் குறிக்கும் வார்த்தைகள், விண்ணப்பம், மன்றாட்டு போன்ற இடங்களிலும் "ஜெ" என்று குறிப்பிடவும்.

**உட்கருத்து**

**இந்த பகுதியில் விண்ணப்பம் என்பது உதவிக்காக அல்லது கிருபைக்காக வேண்டுதல் ஆகும்.**

## கலந்துரையாடு

- "சாலமோன்" என்று குறிக்கப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன?

- இப்பகுதியில் "ஜெபம்" என்று குறிப்பிடப் பட்டுள்ள இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வது என்ன?

28. என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்.

29. உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக.

30. உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

38. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும்,

39. உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

40. தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக.

- தேவ ஜனங்களோடு தேவனுக்குரிய உறவை சாலமோன் எப்படி சித்தரித்தான்?

- அவன் தேவனிடம் கேட்டது என்ன?

- இந்த வேதபகுதியில் ஜெபத்தைக் குறிக்கும் வார்த்தைகளைப் பற்றிக் கலந்துரையாடவும். ஜெபத்தின் தன்மையைக் குறித்து அவை வெளிப்படுத்துவது என்ன?

## உற்றுநோக்கு

சங்கீதபுத்தகமானது பாடல்களும் தேவஜனங்களுக்கான ஜெபங்களும் அடங்கிய தொகுப்பு ஆகும். நாம் தாவீதின் மூன்று சங்கீதங்களை பார்க்கப்போகிறோம். முதலாவது சங்கீதம், தாவீது தனது சிங்காசனத்தைப் பறிக்கவும், உயிரை அழிக்கவும், சதிவேலை செய்த அவனது மகனாகிய அப்சலோமை விட்டு ஓடிச் சென்றபோது எழுதிய சங்கீதம் ஆகும். (2 சாமு. 15)

தலைவர்: சங்கீதம் 3:1-5ஐ சத்தமாக வாசிக்கவும்.

- "என்னுடைய", "நான்", "என்", "அவன்" என்று இந்த வேதப்பகுதி கூறும் தாவீதை குறிக்கும் வார்த்தைகளில் "தா" என்று குறிப்பிடவும்.
- "கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிட்டேன்" என்று வரும் இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

**உட்கருத்து**

"சேலா" என்ற வார்த்தை சங்கீதங்களில் அடிக்கடி வருவதைக் காணலாம். இதன் பொருள் தெளிவற்றதாக உள்ளது. எனினும் பல வேதவல்லுனர்கள் 'சேலா' என்பது இசையில் "தற்காலிக இடைவெளியைக்" குறிக்கும் வார்த்தை என்று நம்புகிறார்கள்.

## கலந்துரையாடு

- 1 மற்றும் 2 வசனங்களில் தாவீதைக் குறித்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன? இந்த இடத்தில் தாவீதின் உணர்ச்சிகளை எப்படி விவரிப்பீர்கள்?

- மூன்றாம் வசனத்தில் "ஆனாலும்" என்ற வார்த்தை ஒரு வேறுபாட்டினை காண்பித்து திசைத்திருப்பத்தை உண்டாக்குகிறது. 4,5 வசனங்களின்படி சத்துருக்களின் மத்தியிலும் அவர்கள் நிந்தையான பேச்சுகள் மத்தியிலும் தாவீது

**சங்கீதம் 3 : 1 - 5**

1. கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்.

2. தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். (சேலா.)

3. ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.

4. நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார். (சேலா.)

5. நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக்கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.

செய்த காரியங்கள் என்ன? அவன் ஏன் இந்த செயலை தொடர்ந்து செய்தான்?

- இந்த வேதபகுதியில் ஜெபத்தைக் குறித்து கூறப்பட்டுள்ள சொற்றொடர் எது?

- தேவன் தாவீதின் ஜெபத்திற்கு பதிலளித்தபோது தாவீது எப்படி செயல்பட்டான்? ஜெபத்தின் ஆரம்பத்தில் இருந்த உணர்ச்சிகளை மாற்றியது எது?

- நீங்கள் கவலைப்பட்ட, ஒடுக்கப் பட்ட அல்லது உங்களுக்கு பழக்கமானவர் கள் யாவரும் உங்களுக்கு எதிராக இருந்ததைப் போன்ற நேரங்களை ஒருமுறை நினைத்துப்பார்க்கவும். அப்போது நீங்கள் செய்தது என்ன?

தலைவர்: குழுவில் உள்ளவர்களில் ஒருவரை தங்கள் வாழ்க்கையில் அனுபவப் பட்ட இப்படிப்பட்ட சூழ்நிலையையும் அதற்காகச் செயல்பட்ட விதத்தையும் குறித்துப் பகிர்ந்துகொள்ள அழைக்கவும்.

- இந்தப்பகுதியில் நீங்கள் ஜெபத்தைக் குறித்துக் கற்றுக்கொண்டதையும் உங்கள் வாழ்க்கையில் அதை எப்படி அப்பியாசப்படுத்த லாம் என்பதையும் குறித்துக் கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

தலைவர்: சங்கீதம் 4:1-5ஐ சத்தமாக வாசிக்கவும்.

- ‘ஜெபம்’ மற்றும் “நான் கூப்பிடுகையில்”, “உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்” என்கிற சொற்றொடர்களி -லும் “ஜெ” என்று குறிப்பிடவும்.
- “தேவன்” மற்றும் “தேவனைக் குறித்து பொருள்படும்” இடங்களிலும் முக்கோணம் △ வரையவும்.

## கலந்துரையாடு

- மறுபடியும் தாவீது மிகுந்த மன உளைச்சலுள்ள சூழ்நிலையில் காணப்பட்டார். தாவீது எவ்வாறு செயல்பட்டார்?

- தன்னுடைய ஜெபத்திற்கு பதிலாக தேவன் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தார்? எதன் அடிப்படையில் தாவீதின் எதிர்பார்ப்பு இருந்தது?

- இந்த வேதபகுதியிலிருந்து தேவனைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- வசனங்கள் 4,5ன்படி நம்முடைய உணர்ச்சிகளுக்கும் ஜெபத்திற்கும் உள்ள தொடர்பைக் குறித்து நீங்கள்

### சங்கீதம் 4 : 1-5

1. என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

2. மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். (சேலா.)

3. பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

4. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யா-திருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். (சேலா.)

5. நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

கண்டுகொண்டது என்ன? நம்முடைய உணர்ச்சிகளை மறுப்பது அல்லது விட்டு விலகுவது தவிர வேறு எதை நாம் தெரிந்தெடுக்க (செய்ய) முடியும்? உங்கள் பதிலை விளக்கவும்.

- அடுத்த முறை பகைமையோடு கூடிய மன உளைச்சலுக்கான சூழ்நிலைகளில் நீங்கள் தள்ளப்படும்போது இப்போது ஜெபத்தைக் குறித்துக் கற்றுக் கொண்டவைகளை நீங்கள் எவ்வாறு அப்பியாசப்படுத்துவீர்கள்?

**சங்கீதம் 5 : 1-3**

1. கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும்.

2. நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.

3. கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

## உற்றுநோக்கு

தாவீது மன உளைச்சலான சூழ்நிலையில் தள்ளப்படும்போது சூழ்நிலைகளைக்குறித்து பயப்படவோ அவைகள்மேல் நோக்கம் வைப்பதையோ விட்டுவிட்டு தேவனை நோக்கி கூப்பிட்டு அவர் மேல் நம்பிக்கை வைத்ததை நாம் காணமுடிகிறது. நீதியின் பலிகளை செலுத்தியபோது கஷ்டங்களின் மத்தியில் சமாதானமே முடிவாக கிடைத்தது. இந்த ஜெபமனிதனிடமிருந்து மேலும் ஒரு எடுத்துகாட்டைக் கூட நாம் பார்க்கலாம்.

தலைவர் : சங்கீதம் 5: 1 - 3ஐ சத்தமாக வாசிக்கவும்......

- இந்த வேதபகுதியில் தாவீதை குறிக்கும் இடங்களில் எல்லாம் "தா" என்று குறிப்பிடவும்.

- "ஜெபம்" மற்றும் "என் வார்த்தைகள்", "என் வேண்டுதல்", "என் கூப்பிடுதல்", "என் தியானம்" என்று பொருள்படும் எல்லா இடங்களிலும் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் தாவீதைக்குறித்தும் அவன் குணங்களைக்குறித்தும் கற்றுக் கொண்டவைகளைக் குறித்து கலந்துரையாடவும். ஒவ்வொரு நாளும் அவனுடைய முதல் நினைவுகள் என்னவாயிருந்தன?

- 'ஜெபம்' என்று குறிக்கப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன? தாவீது எதற்காக ஜெபித்தான்? தாவீது எதிர்பார்த்த காரியம் என்ன?

தலைவர்: நேரம் இருப்பின் இந்த வேதபகுதியில் கற்றுக்கொண்ட காரியங்களை தங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த எப்படி திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை கூறும்படி குழுவில் உள்ள ஒருவரை அழைக்கவும்.

## உற்றுநோக்கு

இதுவரை, ஜெபம் என்பது 'கர்த்தரை நோக்கி கதறுவது' என்று பார்த்தோம். வேதனையின் மத்தியிலும், பயப்படும் சூழ்நிலைகளிலும், நம்பிக்கை இழந்த நிலையிலும் கதறுவது ஆகும். இந்த வகையிலான ஜெபத்தை நம்மில் அநேகர் அடையாளம் கண்டுகொள்ள அல்லது உணர முடியும். ஆனால் 'ஜெபம்' என்பது இடையூறான (கவலையான) நேரங்களில் கதறுவது மட்டுமல்ல. அடுத்த சில வேதபகுதிகளில் ஜெபம் மேலும் மேன்மையான காரியங்களைச் செய்யும் என்பதைக் குறித்துப் பார்க்கப்போகிறோம்.

முதலாவதாக ஏசாயாவிலிருந்து சில வசனங்களைப் பார்ப்போம். இங்கு எருசலேம் ஜனங்களின் ஜெபங்களில் காணப்பட்ட தவறுகளை தேவன் விளக்குகிறார். இது ஒரு எதிர்மாறான உதாரணமாக இருந்தாலும், இது 'ஜெபம் என்பது

என்ன?' என்பதை விளக்குவதற்கு இன்னொருவிதமாக நமக்கு கற்பிக்கிறது.

**ஏசாயா 29 :13 - 14**

13. இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.

14. ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்

தலைவர்: ஏசாயா 29:13,14ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'ஜனங்களை' குறிக்கும் இடங்களை வட்டமிடவும்.
- 'என்னிடத்தில் சேர்ந்து', 'கனம்பண்ணுதல்' என்கிற சொற்றொடர்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் ஜனங்களை குறிக்கும் இடங்களிலிருந்து நீங்கள் கற்று கொள்வது என்ன?
- ஜனங்கள் எவ்விதத்தில் கர்த்தரிடத்தில் சேர்ந்தார்கள்? அவர்கள் இருதயம் இதில் இருந்ததா? உங்கள் பதிலை விவரிக்கவும்.
- இந்த பகுதியில் "சேருதல்" என்பதின் அர்த்தம் என்ன?
- ஜனங்கள் தன்னிடத்தில் சேர்தல் குறித்து தேவன் எவ்வாறு உணர்ந்தார்?
- அவருடைய பதில் என்ன?

- அவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதில் கொடுத்தாரா? ஏன்? அல்லது ஏன் கொடுக்கவில்லை?

- இந்த வேதப்பகுதி நம்முடைய ஆராதனை நேரங்களுக்கும் நம்முடைய ஜெபவாழ்விலும் எப்படி தொடர்புடையதாய் இருக்கிறது என்பதை கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

தலைவர்: எபி 4:14-16, 7:25 மற்றும் 10:19-22 வேதப்பகுதிகளைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- இங்கு “நாம்”, “நமக்கு”, ”நம்முடைய” போன்ற விசுவாசிகளைக் குறிக்கும் சொற்களை வட்டமிடவும்.
- “இயேசு”, “அவர்”, “மகாபிரதான ஆசாரியர்”, “பிராதான ஆசாரியர்” என்று இயேசுவைக் குறிக்கும் இடங்களில் சிலுவைக் குறி போடவும். ✝
- “சேருதல்” என்கிற இடத்தில் “ஜெ“என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனங்களில் “விசுவாசிகளைக்” குறித்து குறிப்பிடப்பட்டவைகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன? நமக்கு இருப்பது என்ன? நாம் என்ன செய்ய வேண்டும்?

### எபிரேயர் 4 : 14 - 16

14. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்-கொண்டிருக்கக்கடவோம்.

15. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

16. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

- தேவனுடைய கிருபாசனத்தண்டையில் நாம் எந்த நோக்கத்திற்காக சேர வேண்டும்?

## எபிரேயர் 7 : 25

25. மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

- தேவனை நாம் கிட்டிச்சேருவதற்கு நமக்கு நம்பிக்கையை அளிப்பது எது?

## எபிரேயர் 10 : 19 - 22

19. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு-பண்ணினபடியால்,

- இந்த வசனங்களிலிருந்து ஜெபத்தைக்குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- நாம் ஜெபிக்கும்போது நாம் எதை எதிர்பார்க்கலாம் என்றும் இதை நம் சொந்த ஜெபவாழ்வில் எப்படி செயல்முறைப்படுத்தலாம் என்றும் கலந்துரையாடவும்.

20. அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

21. தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,

22. துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

## சுருக்கமாக

மற்றவர்கள் நல்ல கோர்வையாக மிக அழகாக ஜெபிப்பதை நீங்கள் கவனித்து வெட்கப்படவோ பயப்படவோ செய்ததுண்டா? கொஞ்சம் சுவாசம் விட்டுக்கொள்ளுங்கள். ஜெபத்திற்கு முன்பதிவு தேவையில்லை. சரியான ஆடை அல்லது அலங்காரமும் தேவையில்லை. ஜெபத்திற்கு சரியான இலக்கணமும் தேவையில்லை. தாவீதின் ஜெபம், 'ஜெபம் என்பது இயற்கையாக தேவனிடம் கதறுவதை' காட்டுகிறது. உங்கள் இருதயத்தில் இருப்பதை சொல்வதும் புலம்பி அழுவதும் ஆகும். உங்களுக்கு எது தேவை என்று சொல்வதும், கதறி அழுவதும், புலம்பி அழுவதும், கெஞ்சிக் கேட்பதும் ஆகும்.

ஜெபம் என்பது என்ன? தேவனிடத்தில் நெருங்கி சேர்வதும் அவரிடம் பேசுவதுமே ஜெபம் ஆகும். நாம் எபிரேயர் 4ல் வாசித்தது போல நம்முடைய மகாபிரதான ஆசாரியனாகிய இயேசு மூலமாய் நாம் தேவனிடம் சேரமுடிகிறது. அவர் மூலமாக தேவனுடைய கிருபாசனத்தண்டை நாம் சேரவும், அவரைக் கிட்டிச்சேரவும் முடியும். அங்கே நாம் அழலாம், உதவி கேட்கலாம், நம்முடைய கவலைகளை அவர் பாதத்தில் வைக்கலாம். மேலும் சங்கீதம் 3,4ல் தாவீது விளக்குவதுபோல தேவன் நம் பாரங்களை தாங்குவதினாலே நாம் அங்கு இளைப்பாறலாம்.

இந்த வாரம் உங்களுடைய இருதயத்தின் கவலைகளை, நம் தேவனிடம் கதறிச் சொல்ல, சிறிது நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தேவனிடம் கிட்டிச்சேர்ந்து அவர் சமூகத்தில் களிகூருங்கள்.

தலைவர்:

உங்களுக்கு நேரம் இருந்தால் குழுவை சிறிது நேரம் மௌனமாக ஜெபிக்க வைக்கவும். அவர்களுடைய இருதயத்தின் கவலைகளை தேவனிடம் கதறிச்சொல்ல உற்சாகப்படுத்துங்கள். தேவனிடம் கிட்டிச்சேரவும் அவர் பிரசன்னத்தில் களிகூரவும் உற்சாகப்படுத்துங்கள். அமைதியான சில நிமிடங்களுக்கு பின் உங்கள் குழுவிற்கு ஜெபிக்க கற்றுக் கொடுக்கும்படி தேவனிடம் கேட்டு ஜெபத்துடன் முடிக்கவும்.

# வாரம் இரண்டு

“தேவனை கிட்டிச்சேர்தலே ஜெபம்” என்று கடந்த வாரத்தில் பார்த்தோம். ஜெபத்திலே நம்முடைய விருப்பங்களில் நேர்மையோடிருந்து, அவைகளை நம்பிக்கையோடு தேவனிடம் ஒப்புக்கொடுக்க முடியும். அந்த நம்பிக்கையோடு இருக்கும்போது அது சில புதிய கேள்விகளைக் கொண்டுவருகிறது. ஜெபம் அவ்வளவு எளிதானதாக இருந்தால் ஏன் நம்மில் அநேகருடைய ஜெபவாழ்க்கை குறைவுள்ளதாய் பெலவீனமுள்ளதாய் இருக்கிறது? ஒரு சாதாரண கிறிஸ்தவன் எலியாவின் வல்லமையையோடும், தாவிதைப்போல தீவிர விருப்பத்தோடும் ஜெபிக்க முடியுமா? இந்த வாரம் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க ஆரம்பிப்போம்.

## உற்றுநோக்கு

இயேசுகிறிஸ்துவின் ஜெபம் - அதாவது பிதாவானவரோடு அவருடைய உரையாடல், அவரது இவ்வுலக வாழ்க்கையின் தரக்குறியீடாகவும்(hallmark), சீஷர்களுடைய கவனத்திலிருந்து தப்பிச்செல்ல முடியாத உண்மையாகவும் இருந்தது.

தலைவர்: லூக்கா 11:1ஐ சத்தமாக வாசிக்கவும்.

- ‘ஜெபம்’ என்று வருகிற இடங்களில் குழுவினரைச் சத்தமாக வாசிக்கசொல்லி “ஜெ” எனக் குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- “ஜெபத்தைக்” குறித்து இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டவைகளிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன?
- வேறு யாராவது ஒருவருடைய ஜெபவாழ்க்கையை பார்த்து நம்மால் “இதுபோல ஜெபிக்கவே முடியாது” என்று நீங்கள் பயந்த, வெட்கப்பட்ட சூழ்நிலைகள் உண்டா?உங்கள் அனுபவத்தை இயேசுவின் ஜெபத்தை கேட்ட சீஷர்களின் உணர்வுகளோடு ஒப்பிடவும்.

### லூக்கா 11 : 1

1 அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: “ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்” என்றான்.

**மத்தேயு 6 : 5 - 8**

5. அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

6. நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது,

- சீஷர்கள் செய்த விண்ணப்பம் என்ன? அது அவர்களுடைய இருதயத்தை எவ்வாறு நமக்கு வெளிப்படுத்துகிறது?

- உங்கள் நிலை என்ன? எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்வதற்கு விரும்புகிறீர்களா? ஜெபத்தைக் குறித்துக் கற்றுக் கொள்வதில், 'ஜெபத்திற்கான வாஞ்சை' ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

## உற்றுநோக்கு

மத்தேயு 6ல் மலைப்பிரசங்கத்தின் ஒரு பகுதியில், ஜெபத்தைக் குறித்த இயேசுவின் தரம்வாய்ந்த போதனையைப் பாாக்கமுடியும். அவருடைய இந்தப் போதனைகள் நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று அடுத்த சில வாரங்களில் கற்றுக்கொள்வதற்கு ஒரு மாதிரியாக அமைகிறது.

தலைவர்: மத்தேயு 6:5-8ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின் வருமாறு செய்யச்சொல்லவும்.

- "அன்றியும்" "நீயோ" என்று வருகின்ற இடங்களில் அடிக்கோடிடவும்.
- 'ஜெபத்தைக்' குறித்து வரும் இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- நீங்கள் வாசித்த இந்த வேதபகுதிகளில இயேசு தன்னை பின்பற்றினவர்களிடத்தில், ஜெபிப்பதை எதிர்பார்த்தாரா? உங்கள் பதிலை விவரிக்கவும்.

- "ஜெபம்" என்று குறிக்கப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட வேறு காரியங்கள் என்ன? நாம் ஜெபிக்கும்போது செய்யக்கூடாத இரண்டு காரியங்கள் என்ன?

- பொது இடங்களில் ஜெபிக்கிறதை இயேசு தடை செய்தாரா? உங்கள் பதிலை விளக்கவும்.

- "வீண்வார்த்தைகளை அலப்புதல்" என்பதற்கு இயேசு கொண்ட அர்த்தம் என்ன?

- இன்று நம்முடைய ஜெபங்களில் வீண் வார்த்தைகளை எப்படி கண்டுகொள்ளவும் விலக்கவும் முடியும்?

## உற்றுநோக்கு

அடுத்ததாக, வேதத்தைக் கற்றுக் கொள்ளும் அநேகர், 'மாதிரி ஜெபமாக' பார்க்கிற 'கர்த்தரின் ஜெபம்' என்று அழைக்கப்படும் ஜெபத்தை பார்ப்போம்.

தலைவர்: மத்தேயு 6 : 9 - 13ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின் வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'ஜெபத்தைக்' குறித்து வரும் இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.
- "தேவன்" மற்றும் "தேவனைக் குறித்து பொருள்படும்" பிதா உட்பட இடங்களிலும் △ முக்கோணம் வரையவும்.

அந்தரங்கத்தில்
பார்க்கிற உன் பிதா
வெளியரங்கமாய்
உனக்குப் பலனளிப்பார்

7. அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

8. அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

### மத்தேயு 6 : 9 - 13

9. நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

10. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

11. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

12. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

13. எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

## கலந்துரையாடு

- மத்தேயு 6:7ன் அடிப்படையில் பாாக்கும் போது 9ம் வசனத்தில் இயேசு தன் சீஷர் களை இதே வார்த்தைகளை சொல்லி தினமும் ஜெபிக்க தூண்டினாரா? உங்கள் பதிலை விவரிக்கவும்.

- இயேசுவின் ஜெபம் நமக்கு தேவனோடு உள்ள உரையாடலுக்கு அடித்தளம் அமைத்து கொடுக்கிறதாய் இருந்தால் அந்த ஜெபம் நமக்கு வலியுறுத்துகிற சில முக்கிய காரியங்களை நாம் குறித்துக்கொள்ள வேண்டும். வேதபகுதியை மீண்டும் வாசித்து, முக்கிய பகுதிகளை கவனிக்கவும். கீழே குறிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகள் வருகின்ற வசனத்தை குறிக்கவும்.

-------ஆராதனை செய்து - துதித்தல் - - பயபக்தியை வெளிப்படுத்துதல்

-------தேவனிடம் பற்றுறுதி, உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்று வெளிப்படுத்துதல்.

-------விண்ணப்பம் - வேண்டுகோள் செய்தல் (தேவையைக் கூறுதல்.)

-------பாவ அறிக்கை - மன்னிப்பை நாடுதல்.

-------விடுதலைக்கான விண்ணப்பம். பாதுகாப்புக்காக வேண்டுதல் செய்தல்,

-------தேவனைக் கனப்படுத்தி வாழ்த்துதல்.

- இந்த ஜெபத்தை துவங்குவதும் முடிப்பதும் எந்த பகுதி? இது கூறுவது என்ன?

- கர்த்தரின் ஜெபத்திலிருந்து நீங்கள் தெரிந்துகொண்டது என்ன? அது உங்கள் ஜெப வாழ்க்கையில் எந்த விதத்திலான தாக்கத்தை உருவாக்குகின்றது?

## உற்றுநோக்கு

தேவன் பரலோகத்தில் இருப்பதையும், அவரை உயர்த்துகிற துதியை ஆரம்பமாகவும் முடிவாகவும் கொண்டதும், இயேசு தன் சீஷர்களுக்கு கொடுத்ததுமான மாதிரி ஜெபத்தை நாம் தியானித்தோம். இதைப் போன்று ஆராதனையில் ஒத்திருக்கின்ற ஜெபத்தை செய்தவர்களாகிய மற்றும் சில நபர்களிடமிருந்து நாம் எதை கற்றுக் கொள்ளலாம் என்று பார்ப்போம்.

தாவீது மற்றும் சாலமோன் வரிசையில் முந்தைய நாள்களில் யூத இராஜாவாகிய யோசபாத்தின் ஜெபத்தைக் குறித்துப் பார்க்கலாம்.

தலைவர்: 2நாளா 20:1-4ஐ சத்தமாக படிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'யோசபாத்தை' குறிக்கும் இடங்களில் 'யோ' என்று குறிப்பிடவும்.
- 'கர்த்தரை தேட', 'கர்த்தரிடத்தில் சகாயந்தேட' என்கிற சொற்றொடர்களிலே 'ஜெ' என்று குறிப்பிடவும்

## கலந்துரையாடு

- 1 மற்றும் 2ம் வசனங்கள் யோசபாத்தின் சூழ்நிலையை எப்படி வெளிப்படுத்துகின்றன?

### II நாளாகமம் 20:1-4

1. இதற்குப் பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள்.

2. சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

3. அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.

4. அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள்; யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்.

## II நாளாகமம் 20:5-12

5. அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிராகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று:

6. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது,

- அவனது முதலாவது செயல் என்ன? அவன் அதில் எப்படி வெற்றி கொண்டான்?

- யோசபாத் யூத ஜனங்களை எதைச் செய்யும்படிக்கு நடத்தினான்? ஏன்?

- இந்த செயல் இன்று நம் வாழ்க்கையில் எப்படி நடைமுறைப்படுத்தக் கூடும் என்பதை கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

யோசபாத்தும் ஜனங்களும் மரணபயத்தைச் சந்தித்ததால் இராஜா கர்த்தரிடத்தில் திரும்பினான். அடுத்த பக்கத்திலுள்ள அவனுடைய ஜெபத்தை வாசிக்கும்போது அவன் எவ்வாறு ஆராதனை, மற்றும் துதித்தலின் பகுதியை ஒருமைப்படுத்துகிறான் என்பதை கவனமாக பார்க்கவும்.

தலைவர்: 2நாளாகமம் 20:5-12ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- முன்பு குறிப்பிட்டதுபோல 'கர்த்தரை', 'தேவனை' குறிக்கும் இடங்களில் முக்கோணம் குறியிடவும். △
- 'கூப்பிடுதல்' வருகிற இடங்களில் 'ஜெ' என குறிப்பிடவும்

## கலந்துரையாடு

- யோசபாத் தேவனைக்குறித்து கூறுவதை சுருக்கமாக கூறவும்.

- இயேசுவின் ஜெபத்தோடு யோசபாத்தின் ஜெபத்தை ஒப்பிடவும். என்ன ஒப்புமைகளை காண்கிறீர்கள்?

- 7 முதல் 9 வரையுள்ள வசனங்களில் யோசபாத் தேவனிடம் நினைவுபடுத்துவது என்ன?

- யோசபாத்தின் விண்ணப்பம் அல்லது வேண்டுதலை எந்த வசனத்தில் நீங்கள் காண்கிறீர்கள்? குறிப்பாக அவன் தேவனிடம் கேட்டது என்ன?

ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.

7. எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்தத் தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா?

8. ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள்.

9. எங்கள்மேல் பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உம்முடைய நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால், நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்து நின்று, எங்கள் இடுக்கணில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், தேவரீர் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள்.

10. இப்போதும், இதோ, இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து

வருகிறபோது,
அம்மோன் புத்திரர்,
மோவாபியர், சேயீர்
மலைத்தேசத்தாருடைய
சீமைகள் வழியாய்ப்
போக நீர் உத்தரவு
கொடுக்கவில்லை;
ஆகையால் அவர்களை
விட்டு விலகி, அவர்களை
நாசப் படுத்தாதிருந்தார்கள்.

11. இப்போதும், இதோ,
அவர்கள் எங்களுக்கு
நன்மைக்குத் தீமையைச்
சரிக்கட்டி, தேவரீர்
எங்களைச் சுதந்தரிக்கப்
பண்ணின உம்முடைய
சுதந்தரத்திலிருந்து
எங்களைத் துரத்திவிட
வருகிறார்கள்.

12. எங்கள் தேவனே,
அவர்களை நீர்
நியாயந்தீர்க்கமாட்டீரோ?
எங்களுக்கு விரோதமாக
வந்த இந்த ஏராளமான
கூட்டத்திற்கு முன்பாக நிற்க
எங்களுக்குப் பெலனில்லை;
நாங்கள் செய்யவேண்டியது
இன்னதென்று எங்களுக்குத்
தெரியவில்லை; ஆகையால்
எங்கள் கண்கள்
உம்மையே நோக்கிக்
கொண்டிருக்கிறது என்றான்.

- உங்கள் சொந்த ஜெபவாழ்க்கையில் செயல்படுத்தத்தக்க எவ்வகையான காரியத்தை யோசபாத்திடமிருந்து கற்றுக் கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

யோசபாத்தின் ஜெபத்தில் ஒரு பகுதி தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்துவதாகவும், பின்பு விடுதலைக்காக வேண்டி நிற்கிறதையும் பார்த்தோம். ஆனால் முதலாவதாக அவன் இயேசுவைப் போல தேவனை கனப்படுத்தி, மகிமைப்படுத்தி, அவர் யார் என்பதை அறிக்கை செய்து, ஜெபத்தை ஆரம்பித்தான்.

ஆராதனை நிறைந்ததும் தேவனை உயர்த்துகிற ஜெபமுமாகிய இயேசுவின் ஜெபத்தை நாம் பின்பற்றுகிறவர்களாய் இருந்தால் நாம் அவர் யார் என்பதை அறிவது மிக அவசியம். வேதத்தில் தேவனுடைய அநேக பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெயரும் அவருடைய குணத்தை வெளிப்படுத்துபவை. அவைகளில் 3 பெயர்களை பழைய ஏற்பாட்டின் பல வேதபகுதியிலிருந்து தியானித்து, அவைகள் நம்முடைய ஆராதனையில் எதைக் குறிப்பிடுகிறது என்று கற்றுக் கொள்வோம்.

முதலாவதாக ஆதி 14ஐ பார்க்கலாம். பின்நாட்களில் ஆபிரகாம் என்று பெயர் மாற்றப்பட்ட ஆபிராம், தன் தம்பி மகனையும் அதோடு பலரையும் நான்கு இராஜாக்களிடமிருந்து, விடுவித்து போரிலிருந்து திரும்பி வருகிறான்.

தலைவர்: ஆதி 14:18-20ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'உன்னதமான தேவன்' என்று வருகிற இடங்களில் முக்கோணம் இடவும். △

## கலந்துரையாடு

- இந்த பகுதியில் மூன்று முறை பயன் படுத்தப்பட்டுள்ள தேவனின் பெயர் என்ன?

- 19ஆம் வசனத்தில் மேலும் தேவனைக் குறித்து விளக்கப்பட்ட காரியத்தை எழுதுக.

### உட்கருத்து

உன்னதமான தேவன் என்ற வார்த்தை எல்-எலியோன் என்ற வார்த்தைக்கு சமம். தேவனுடைய கர்த்தத்துவம் அதாவது தலைமை உரிமையைக் குறிக்கும்.

- மெல்கிசெதேக்கின் கூற்றுப்படி தேவன் ஆபிரகாமுக்கு செய்தது என்ன?

### ஆதியாகமம் 14:18- 20

18. அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து,

19. அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக.

20. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.

## சங்கீதம் 91 : 1 - 9

1. உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

2. நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

3. அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.

4. அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

5. இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

## உற்றுநோக்கு

தலைவர்: சங்கீதம் 91:1-9ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'தேவனை', 'கர்த்தரை' என்று பொருள்படும் எல்லா இடங்களிலும் முக்கோணக் குறியிடவும். △

## கலந்துரையாடு

- தேவனைக்குறித்து விளக்கும்படி இந்த வேதபகுதியில் 2முறை பயன்படுத்தப்பட்டுள்ள பெயர் என்ன?

- தேவனைக்குறித்து வேறு எந்த விளக்கங்களை இப்பகுதியில் காண்கிறீர்கள்?

- தேவன் உங்கள் இக்கட்டான நேரங்களில் உதவி செய்வார் என்பதை எப்படி தெரிந்துகொள்ளலாம்?

- தேவன் மகா உன்னதமானவர் என்பதை அறிந்துகொள்வது ஆராதனைக்கு எப்படி தொடர்புடையது என்றும், அது எவ்வாறு உங்கள் ஜெபவாழ்க்கையை பாதிக்கிறது என்றும் கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

**தலைவர்:** சங்: 23:1-6ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- இந்த வேதபகுதியில் தேவன் செய்யும் செயல்களில் வரிசை எண் குறிப்பிடவும். (அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார் என்பது அவர் எனக்கு செய்யும் முதல் செயலாகும். இதை உங்களுக்காக நாங்கள் வேதபகுதியில் குறித்திருக்கிறோம்.)

6. இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

7. உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

8. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய்.

9. எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்.

### சங்கீதம் 23 : 1 - 6

1. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

2. அவர் ① என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

3. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

6. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் சங்கீதக்காரன், தேவன் எப்படிப்பட்டவர் என்று சொல்கிறான்?

- தேவன் நமக்காகச் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தவும்.

- நடைமுறையில் நம்முடைய சொந்த வாழ்விலும் தேவன் இப்படிப்பட்ட குறிப்பிட்ட வழிகளில் நம்மிடத்தில் செயல்படுகிறார் என்பதை நாம் எவ்வாறு நிருபிக்கமுடியும்?

- தேவன் உங்களுடைய மேய்ப்பராய் இருக்கிறார் என்பதை அறிந்துகொண்ட இந்த சத்தியம், உங்கள் ஜெபம் மற்றும் ஆராதனை வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

## உற்றுநோக்கு

தேவனை குறித்த மற்றொரு விளக்கம் அல்லது பெயரை நாம் இங்கே பார்க்கலாம்.

தலைவர்: யாத் 15:26மற்றும் சங் 107:17-21ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'தேவனைக்' குறிக்கும் இடங்களில் முக்கோணம் குறி இடவும். △
- 'நிர்மூடர்' என்று வரும் இடங்களில் (அதன் பிரதிப்பெயர் உட்பட) சத்தமாக வாசித்து 'நி' என்று குறியிடவும்.

## கலந்துரையாடு

- யாத் 15:26ல் தேவன் தன்னை யாரென்று கூறுகிறார்?

### உட்கருத்து

'யெகோவா ரா.்.பா' என்ற எபிரேய பெயர் 'தேவன் குணமாக்குபவர்' என்று விளங்கும்படி பயன்படுத்தப்படுகிறது. இதற்கு 'குணமாக்கும் தேவன்' என்று பொருள்.

- சங்கீதம்: 107ல் நிர்மூடர் என்று வரும் இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன?

### யாத்திராகமம் 15 : 26

26. நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவை-களைச்செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.

### சங்கீதம் 107:17 - 21

17. நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்.

18. அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்.

19. தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்.

20. அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

21. அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,

- அவர்கள் தேவனை நோக்கி ஏன் கூப்பிட்டார்கள் அல்லது ஜெபித்தார்கள்?

- அவர்களின் ஜெபத்திற்கு பதிலாக தேவன் செய்த செயல்கள் என்ன?

- தேவனை, உங்கள் குணமாக்கும் தெய்வமாய் புரிந்துகொள்ளும்போது அது எவ்விதத்தில் உங்கள் ஜெபத்தில் தாக்கத்தை உருவாக்குகிறது என்பதை கலந்துரையாடவும்.

## சுருக்கமாக

மத்தேயு 6:5-15ல் இயேசு அநேக முக்கிய பகுதிகளைக் கொண்ட ஒரு மாதிரி ஜெபத்தைக் காண்பிக்கிறார். இதில் முதலாவது ஆராதனை, “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” என்று தேவனை உயர்த்துகிற பகுதி.“தேவனுடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும், நாம் செய்யும் பதிற் செயலே ஆராதனை”, என்று ஒருவர் கூறுகிறார். தேவன் யார் என்பதை நாம் அறிக்கையிடுவதன் மூலமாகவும் நாம் கற்றுக்கொண்டபடி, அவருடைய வார்த்தையில் அவர் வெளிப்படுத்தியுள்ள குணநலன்களின்படி, நம்மேல் அவர் கிரியை செய்வதை ஏற்றுக்கொள்வதாலும் நாம் அவரை ஆராதிக்கலாம்.

உதாரணமாக, வேதம் அவரை முழுமையாக எல்லா சூழ்நிலைகளையும் அடக்கி ஆள்கிறவராக, ‘உன்னதமானவர்’ என்று சித்தரிக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. அவருக்கு எட்டாத சூழ்நிலைகள் எதுவுமில்லை. அவர் வல்லமையுடையவரும் உங்கள் ஜெபத்தை கேட்க விரும்புகிறவரும் உங்கள் ஆபத்தான நேரங்களில் உங்களுக்கு பதிலளிக்கிறவராயுமிருக்கிறார். உங்கள் மேய்ப்பனாக உங்களை குணமாக்குகிறவராக, தேவன் உங்கள் ஆத்துமாவை தேற்றி, உங்கள் வேதனைகளிலிருந்து உங்களை விடுவிக்க விரும்புகிறார்.

வேதத்திலுள்ள ஜெபங்களை நீங்கள் பார்க்கும்போது ஒன்றை கவனிக்கவும். தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் யாருமே “உம்மை துதிக்கிறேன், இயேசுவே” “உம்மை துதிக்கிறேன் இயேசுவே” என்று மீண்டும் மீண்டும் ஒரே வார்த்தையையோ சொற்றொடர்களையோ பயன்படுத்தவே இல்லை. அதற்கு மாறாக ஆராதிப்பவர்கள் தேவனுடைய குணநலன்களையும் அவருடைய வழிகளையும் ஒத்திகை (rehearses) கூறவும் அவருடைய உண்மைதன்மையையும் அவருடைய ஆச்சரியமான வாக்குத்தத்தங்களையும் நினைவுபடுத்தவும் செய்தனர். உண்மை தெய்வத்தை ஆராதிக்காத புறஜாதியார், அவர்கள் தங்கள் தெய்வங்களை ஆராதிக்கும்போது அடிக்கடி உணர்ச்சிவசப்படவும் வெறித்தன்மையோடு சொற்றொடர்களை மீண்டும் மீண்டும் சொல்கின்றனர். ஆனால் தேவபிள்ளைகள் அப்படி அல்ல. நம்முடைய ஆராதனை உணர்ச்சிகளை

அடிப்படையாக கொண்டது அல்ல. சத்தியத்தை அடிப்படையாக கொண்டது. நம்முடைய துடிதுடிப்பான வார்த்தைகளில் அல்ல. தேவனுடைய உண்மைத்துவத்தில் நம்முடைய ஆராதனை இருக்க வேண்டும்.

தலைவர்:

ஜெபத்தோடு குழுவை முடிக்கவும். தேவன் யார் என்பதை அறிக்கையிட்டு தேவனை ஆராதிக்க அழையுங்கள். தேவன் யார் என்பதை விளக்க ஒரு சொற்றொடரையோ, ஒரு வார்த்தையையோ நீங்கள் கூறலாம். பின்பு சங்கீதம் 107:1-13ஐ வாசித்து முடிக்கவும்.

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது.

கர்த்தரால் சத்துருவின் கைக்கு
நீங்கலாக்கி மீட்கப்பட்டு,

கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும்
தெற்கிலுமுள்ள பல
தேசங்களிலுமிருந்து
சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச்
சொல்லக்கடவர்கள்.

அவர்கள் தாபரிக்கும் ஊரைக்
காணாமல், வனாந்தரத்திலே
அவாந்தரவழியாய்,

பசியாகவும், தாகமாகவும், ஆத்துமா
தொய்ந்ததாகவும் அலைந்து
திரிந்தார்கள்.

தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக்
கூப்பிட்டார்கள், அவர்கள்
இக்கட்டுகளிலிருந்து அவர்களை
விடுவித்தார்.

தாபரிக்கும் ஊருக்குப்போய்ச்சேர,
அவர்களைச் செவ்வையான
வழியிலே நடத்தினார்.

தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர்
திருப்தியாக்கி, பசியுள்ள
ஆத்துமாவை நன்மையினால்
நிரப்புகிறாரென்று,

அவருடைய கிருபையினிமித்தமும்,
மனுபுத்திரருக்கு அவர் செய்கிற
அதிசயங்களினிமித்தமும் அவரைத்
துதிப்பார்களாக.

தேவனுடைய வார்த்தைகளுக்கு
விரோதமாய்க் கலகம்பண்ணி,
உன்னதமானவருடைய
ஆலோசனையை
அசட்டைபண்ணினவர்கள்,

அந்தகாரத்திலும் மரண இருளிலும்
வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும்
இரும்பிலும் கட்டுண்டு
கிடந்தார்கள்.

அவர்களுடைய இருதயத்தை
அவர் வருத்தத்தால்
தாழ்த்தினார்; சகாயரில்லாமல்
விழுந்துபோனார்கள்.

தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக்
கூப்பிட்டார்கள்; அவர்கள்
இக்கட்டுகளிலிருந்து அவர்களை
நீங்கலாக்கி இரட்சித்தார்.

# வாரம் மூன்று

இந்த வாரம் தொடர்ந்து ஜெபத்தின் முதல் பகுதியைக்குறித்து, ஆராதனையில் நன்றி கூறுதலுக்கான முக்கியத்துவத்தை குறித்து பார்ப்பதின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

தேவனிடத்தில் கிட்டிச்சேரும்போது, அவரை நோக்கி கூப்பிடும்போது, நீங்கள் ஜெபிக்கும்போது, உங்கள் வாழ்க்கையில் தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறதை நீங்கள் கவனித்ததுண்டா? அப்படியென்றால் தேவனுடைய இரக்கமும், கிருபையும் நன்றிகூறுதலுக்கும் மேலாக, அவரிடம் உண்மையான விசுவாசத்திற்கு நேராக கொண்டுசென்றதுண்டா? அருமை நண்பரே! நிச்சயமாக இதற்கு நேராகத்தான் இன்றைய போதனை நம்மை கொண்டு செல்கிறது. நம்முடைய ஆராதனை எவ்வாறு அவருடைய ராஜ்யத்திற்கு நித்திய விசுவாசியாக அழைத்து செல்கிறது என்பதைக்குறித்து பார்க்கப்போகிறோம்.

மிக சிறந்த போதனை ஒன்றை கற்றுக்கொள்ள போகிறீர்கள். கர்த்தருடைய வார்த்தையில் உங்கள் நேரத்தை களிப்பாக்குங்கள்.

## உற்றுநோக்கு

தானியேல் இளைஞனாய் இருந்தபோது பாபிலோன் எருசலேமை முற்றுகையிட்டபோது, அவன் போர்க்கைதியாக கொண்டுபோகப்பட்டு நேபுகாத்நேச்சார் ராஜாவின் அரசமாளிகையில் வேலை செய்ய பயிற்றுவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தான். ஒருவராலும் அதன் பொருளை விளக்கமுடியாத சொப்பனத்தை ராஜா கண்டபோது, தானியேல் அதற்கு பதிலை கர்த்தரிடம் கேட்டான். அடுத்ததாக என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம்

தலைவர்: தானியேல் 2:19-23ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- தேவனை குறிக்கும் இடங்களில் முக்கோணம் போடவும். △
- ஸ்தோத்தரித்தல், துதித்து புகழ்தல், என்ற வரம் இடத்தில் இரட்டை அடிக்கோடிடவும்.

### தானியேல் 2:19 - 23

19. பின்பு இராக்காலத்தில்
தரிசனத்திலே தானியேலுக்கு
மறைபொருள்
வெளிப்படுத்தப்பட்டது;
அப்பொழுது தானியேல்
பரலோகத்தின் தேவனை
ஸ்தோத்திரித்தான்.

20. பின்பு தானியேல்
சொன்னது: தேவனுடைய
நாமத்துக்கு
என்றென்றைக்குமுள்ள
சதாகாலங்களிலும்
ஸ்தோத்திரமுண்டாவதாக;
ஞானமும் வல்லமையும்
அவருக்கே உரியது.

21. அவர் காலங்களையும்
சமயங்களையும்
மாற்றுகிறவர்; ராஜாக்களைத்

தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

22. அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

23. என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான்.

## கலந்துரையாடு

- இந்த வசனங்களில் தானியேல் முக்கியப்படுத்தும் தேவனின் குணங்கள் எவை?

- இந்த வேதபகுதியில் ஆராதனை வெளிப்படுகிறதை எப்படி பார்க்கிறீர்கள்?

- தானியேலின் ஜெபத்திலிருந்து நீங்கள் அறிந்துக்கொண்ட வெளிப்பாடு எப்படி உங்கள் தனிப்பட்ட ஜெப வாழ்க்கையில் தொடர்புடையதாயிருக்கிறது?

## உற்றுநோக்கு

தலைவர் : பிலிப்பியர் 4:4-6, சங்கீதம்:100 மற்றும் சங்கீதம்:118ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'கர்த்தரைக்' குறிக்கும் இடங்களில் முக்கோணம் குறியிடவும்.
- துதித்தல், ஸ்தோத்தரித்தல் என்று வரும் இடங்களில் இரட்டை அடிக்கோடிடவும். ══
- 'ஜெபம்', 'விண்ணப்பம்', 'வேண்டுதல்', 'கூப்பிடுதல்' போன்ற வார்த்தைகள் வரும் இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதப்பகுதியிலிருந்து தேவனைக் குறித்தும், அவரோடுள்ள நம்முடைய உறவைக் குறித்தும் நீங்கள் கற்றுக் கொண்டது என்ன? நாம் என்ன செய்ய வேண்டும்?

### பிலிப்பியர் 4 : 4 - 6

4. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷ மாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

5. உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறி-த்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும், தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

### சங்கீதம் 100 : 1 - 4

1. பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

2. மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

3. கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கி-றோம்.

4. அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

## சங்கீதம் 118 : 1 - 9

1. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.

2. அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக.

- இந்த வசனங்களிலிருந்து ஜெபத்தைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- ஜெபம், துதித்தல் என்பவற்றிற்கு இடையே எவ்வித தொடர்பை நீங்கள் பார்க்கிறீர்கள்?

- பிலிப்பியர் 4 : 6ன் படி நம்முடைய ஜெபங்களோடும், விண்ணப்பங்களாடும் கூட இணைக்கப்பட வேண்டியது என்ன? ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள் என்றும், இந்த ஜெபத்தின் பகுதி உங்களை எவ்விதத்தில் தொடர்புபடுத்துகிறது என்றும் கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

'ஆராதனையே' மாதிரி ஜெபத்தின் 'ஆரம்பப்பகுதியும்', 'முடிவுப்பகுதியுமாய்' இருக்கிறது என்றும், 'நன்றி கூறுதல்' ஆராதனையில் இயற்கையான பகுதி என்றும் பார்த்தோம். நாம் ஜெபிக்கும்போது அவர் வாசல்களில் துதியோடும் புகழ்ச்சியோடும் பிரவேசிக்க வேண்டும்.

ஜெபத்தின் இரண்டாவது பகுதி தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த நம்முடைய விசுவாசத்தின் வெளிப்பாடு. இது ஆராதனையில் இயற்கையான வெளிப்பாடு. முக்கியமாக நன்றி செலுத்துதலில் அவர் நம் வாழ்க்கையில் செய்தவற்றை நினைத்து பார்க்கும்போது, நம்முடைய அழிவற்ற விசுவாசத்தோடு அவர் வாக்குக்குக் கட்டுப்படுவதே நாம் பதிலாக செய்யவேண்டியது. "உம்முடைய

3. அவர் கிருபை
என்றுமுள்ளதென்று,
ஆரோனின் குடும்பத்தார்
சொல்வார்களாக.

4. அவர் கிருபை
என்றுமுள்ளதென்று,
கர்த்தருக்குப்
பயப்படுகிறவர்கள்
சொல்வார்களாக.

5. நெருக்கத்திலிருந்து
கர்த்தரை நோக்கிக்
கூப்பிட்டேன், கர்த்தர்
என்னைக் கேட்டருளி
விசாலத்திலே வைத்தார்.

6. கர்த்தர் என்
பட்சத்தில் இருக்கிறார்,
நான் பயப்படேன்;
மனுஷன் எனக்கு
என்னசெய்வான்?

7. எனக்கு அநுகூலம்
பண்ணுகிறவர்கள்
நடுவில் கர்த்தர் என்
பட்சத்தில் இருக்கிறார்;
என் சத்துருக்களில்
சரிக்கட்டுதலைக்
காண்பேன்.

8. மனுஷனை
நம்புவதைப்பார்க்கிலும்,
கர்த்தர் பேரில்
பற்றுதலாயிருப்பதே
நலம்.

9. பிரபுக்களை
நம்புவதைப்பார்க்கிலும்,
கர்த்தர் பேரில்
பற்றுதலாயிருப்பதே
நலம்.

ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக." மத். 6:10.

**பிலிப்பியர் 3 : 20**

20. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்-கொண்டிருக்கிறோம்.

தலைவர்: பிலிப்பியர் 3:20 மற்றும் மத்தேயு 6:33ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- குடியிருப்பு, இராஜ்யம் என்று வரும் இடங்களில் மேகம்  போன்று படம் வரையவும்.

## கலந்துரையாடு

- விசுவாசிகளாகிய நம்முடைய குடியிருப்பு எங்கே இருக்கிறது?

**மத்தேயு 6 : 33**

33. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

- மத்தேயு 6 : 33ன் படி பரலோகத்தின் பிள்ளைகளாகிய நம்முடைய பொறுப்பு என்ன?

- அந்த பொறுப்பை நீங்கள் நிறைவேற்று கிறீர்கள் என்பதற்கு உங்கள் வாழ்க்கை கொடுக்கும் ஆதாரம் / அறிகுறி என்ன?

- சிறிது நேரம் எடுத்து உங்கள் மாதிரியான வாழ்க்கையைக் குறித்து சிந்திக்கவும். தேவனுடைய இராஜ்யத்தை நாடுவதற்கு நீங்கள் ஒவ்வொருநாளும் எவ்வளவு நேரத்தை பயன்படுத்துகிறீர்கள்? உங்கள் நிஜமான விசுவாசத்தை குறித்து இது வெளிப்படுத்துவது என்ன?

● தேவனோடுள்ள உங்கள் உண்மைத் தன்மையைத் தடை செய்யும் பூமிக்குரிய பிரச்சனைகள் என்ன? அவைகளை எப்படி நீங்கள் சமாளிப்பீர்கள்?

## உற்றுநோக்கு

தலைவர்: 2 தீமோத்தேயு 2 : 15 மற்றும் மத்தேயு 4 : 4ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

● 'சத்தியவசனம்', 'வார்த்தை' என்று வரும் இடங்களில் "வே" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

● இந்த வசனங்களில் தேவனுடைய வார்த்தை என்று குறிப்பிடப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன? ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இது முக்கியமானது என்பதை எப்படி விவரிப்பீர்கள்?

● பரலோக பிள்ளைகளாகிய உங்களுக்கு ஆகாரமாயிருக்க வேண்டியது என்ன? உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும் விதமாய் எவ்வளவு நேரம் தேவனுடைய வார்த்தையில் செலவு செய்கிறீர்கள்? உங்கள் பதிலை விளக்கவும்.

### II தீமோத்தேயு 2:15

15. நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

### மத்தேயு 4 : 4

4. அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திர-மல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

## மாற்கு 8 : 34

34. பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

தலைவர்: மாற்கு 8:34ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'இயேசுவை' குறிக்கும் இடங்களில் சிலுவைக் ✝ குறியிடவும்.

## கலந்துரையாடு

- இயேசு ஆண்களையும், பெண்களையும் அவரை பின்பற்றக் கூறிய போது எந்த வகையிலான உண்மைத்தன்மையை அவர்களிடமிருந்து எதிர்பார்த்தார்?

- சிலுவை, மரணத்திற்கான கருவியாகும். இயேசுவை பின்பற்றுவது குறித்து இது உங்களுக்கு சொல்வது என்ன என்பதைக் குறித்து கலந்துரையாடவும்.

- இந்த நேரத்தில் இந்த வேதபகுதிகள் என் ஜெப வாழ்கையில் செய்ய வேண்டுவது என்ன என்பதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். மேலும் ஒரு வேதபகுதியை தியானிப்பதற்குக் காத்திருக்கவும். பின்பு நாம் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து தியானிக்கலாம். நாம் வாசிக்கும்போது இயேசுவின் ஜெபத்தின் 2-வது பகுதியை நினைவில் வைத்து கொள்ளவும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக".

## உற்றுநோக்கு

மத்தேயு 7:18-27ல் தேவனுடைய இராஜ்யத்திற்கு பங்காளிகளாய் இருப்பதைக் குறித்து தன் சீஷர்களிடம் இயேசு விளக்குகிறார்.

தலைவர்: மத்தேயு 7 : 18 - 27ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- 'இயேசு' என்று பொருள்பட வரும் இடங்களில் ✝ சிலுவை போடவும். மற்றும் 'உமது நாமம்' என்கிற இடங்களையும் குறிக்கவும்.
- 'கனி' என்று வரும் இடங்களில் ஒரு அரைவட்டம்  வரையவும்.
- 'பிதாவின் சித்தத்தின்படி' செய்கிறவன் 'என்னுடைய இந்த வார்த்தைகளை கேட்டு' என்ற சொற்றொடர்களை அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- 'கனி' என்று குறிப்பிடப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வது என்ன?

### மத்தேயு 7 : 18 - 27

18. நல்ல மரம்
கெட்ட கனிகளைக்
கொடுக்கமாட்டாது;
கெட்ட மரம்
நல்ல கனிகளைக்
கொடுக்கமாட்டாது.

19. நல்ல கனிகொடாத
மரமெல்லாம்
வெட்டுண்டு,
அக்கினியிலே
போடப்படும்.

20. ஆதலால்,
அவர்களுடைய
கனிகளினாலே
அவர்களை அறிவீர்கள்.

21. பரலோகத்திலிருக்கிற
என் பிதாவின்
சித்தத்தின்படி
செய்கிறவனே
பரலோகராஜ்யத்தில்
பிரவேசிப்பானேயல்லாமல்,
என்னை நோக்கி:
கர்த்தாவே!
கர்த்தாவே! என்று
சொல்லுகிறவன் அதில்
பிரவேசிப்பதில்லை.

22. அந்நாளில் அநேகர்
என்னை நோக்கி:
கர்த்தாவே! கர்த்தாவே!
உமது நாமத்தினாலே
தீர்க்கதரிசனம்
உரைத்தோம்
அல்லவா? உமது
நாமத்தினாலே
பிசாசுகளைத்
துரத்தினோம் அல்லவா?
உமது நாமத்தினாலே
அநேக அற்புதங்களைச்
செய்தோம் அல்லவா?
என்பார்கள்.

23. அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

24. ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷ னுக்கு ஒப்பிடுவேன்.

25. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏன்னென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

26. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

27. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து,

- போலியானவர்களிடமிருந்து உண்மையான விசுவாசிகளை வேறுபடுத்திக் காட்டுவது எது?

- இந்த பகுதியில் இயேசுவைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- ‘பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன்’, ‘என் வார்த்தைகளைக்கேட்டு’ என்று வரும் சொற்றொடர்களில் நீங்கள் காணும் தேவனோடுள்ள உறவைக் குறித்த உண்மைகள் என்ன?

- தேவனுடைய இராஜ்யத்திற்கு உண்மையுள்ளவனாயிருக்கவோ அவருடைய சித்தத்தின்படி செய்யவோ உனக்கு விருப்பமேயில்லாவிட்டால், வெறும் ஜெபத்தை மட்டும் செய்வதால் என்ன பிரயோஜனம்? உங்கள் பதிலை விவரிக்கவும்.

## உற்றுநோக்கு

தேவனுடைய சித்தத்திற்கு மாறான கிரியைகளை நீங்கள் செய்தால் என்ன நடக்கும்? அவருடைய ராஜ்யத்திற்கு விசுவாசமற்றவர்களாய் காணப்பட்டால் என்ன நடக்கும்?

தலைவர்: 1 யோவான் 1 : 9ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச்சொல்லவும்.

- இங்கு 'தேவனைக்' குறிக்கும் இடங்களில் முக்கோணம் வரையவும். △

### உட்கருத்து

தேவனுடைய சட்டத்திட்டங்களை மீறுவதே பாவம். தேவன் உங்கள் பாவத்தைக்குறித்து என்ன சொல்கிறாரோ, அதை நீங்கள் ஒத்துக் கொண்டு, அறிக்கை செய்வதுதான் "பாவ அறிக்கை". அதாவது நீங்கள் செய்தது தவறு என்று தேவனிடம் ஒத்துக்கொள்வது என்று பொருள்படும்.

'மன்னித்தல்' என்பது தொலைவில் அனுப்புவது அல்லது 'ஒன்றை அகற்றுவது' என்று பொருள்படும். நம்முடைய பாவங்களை நாம் ஒப்புக்கொள்ளும்போது தேவன் அவைகளை நம்மை விட்டு அகற்றுகிறார். அவர் நம்மை 'சுத்திகரிக்கிறார்'.

அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

### I யோவான் 1 : 9

9. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

## கலந்துரையாடு

- தேவனுக்கு விரோதமாக நீங்கள் பாவம் செய்திருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உட்கருத்து பகுதியில் நீங்கள் கற்றுக்கொண்டதின் அடிப்படையில் அதின் உண்மையான அர்த்தம் என்ன என்று கலந்துரையாடவும்.

- நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் தேவன் செய்யும் இரண்டு காரியங்கள் என்ன?

- அவர் இதை செய்வார் என்பதற்கு நாம் எதன் அடிப்படையில் உறுதியாய் இருக்க முடியும்? தேவன் செயல்படுவதற்கு அவரை வற்புறுத்துவது என்ன?

## சுருக்கமாக

ஆராதனையின் மிக முக்கியமான பகுதி கர்த்தருக்கு நன்றி செலுத்துதல்தான் என்று இயேசுவின் மாதிரி ஜெபத்தின் முதல் பகுதியில் பார்த்தோம். நாம் நன்றி கூறுதலோடு ஜெபிக்க வேண்டும் என்று பவுலும் கட்டளையிட்டிருக்கிறார். உண்மையாக சொல்லவேண்டுமென்றால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நன்றி செலுத்துவதற்கு விசுவாசம் தேவைப்படுகிறது. சில சமயங்களில் நம் வாழ்வில் வேதனைகள் தோன்றுகின்றன. எனினும் விசுவாசம் "தேவன் இன்னமும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்" என்று சொல்லுகிறது. விசுவாசம் என்பது எதிர்மறையான சூழ்நிலையிலும் "அவர் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி ஆளுகை செய்கிறவர்" என்றும் நம்புகிறது. மாறாக தேவனுடைய அதிகாரத்தையும், வல்லமையையும் நாம் கேள்வி கேட்டால், சந்தேகப்பட்டால் நம்முடைய ஜெபவாழ்க்கை எப்படி இருக்கவேண்டுமோ அப்படி ஒருபோதும் இருக்காது.

கர்த்தரின் ஜெபத்தில் இரண்டாவது பகுதி, தேவனுக்கு நாம் எப்போதும் உண்மையுள்ளவர்களாகவே இருப்போம் என்ற உறுதிப்பாட்டை அல்லது நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவது ஆகும். விசுவாசிகளாகிய நாம் பரலோகத்தின் குடிமக்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கு விசுவாசமாயிருப்பது மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிதல் என்பதின் பொருள் நம்முடைய சுயம் மரித்து தேவனுக்கு நம்மை முற்றிலும் அர்ப்பணிப்பது ஆகும்.

"எனக்கு தெரியும் நான் இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டும், ஆனால்....." அல்லது "எனக்கு தெரியும் நான் வேதத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும், ஆனால்.....", அல்லது "எனக்கு தெரியும் நான் சாட்சி பகரவேண்டும்" என்று பிறர் சொல்வதை கேட்டிருக்கிறீர்களா? அல்லது ஒருவேளை நீங்களே அதை உங்களுக்குள்ளே சொல்லியிருக்கிறீர்களா? அப்படி இருக்குமானால்? உண்மையாகவே இவ்வாக்கியத்தை இவ்வாறாக பூர்த்தி செய்யலாம் - 'என் முதல் கடமை தேவனோடு உண்மையாயிருப்பதில் இல்லை என்பதே.' நம்முடைய முதன்மையான உண்மைப்பற்று, தேவனுடைய ராஜ்யத்தோடு இருக்கும்போது நம்முடைய உண்மைப்பற்றை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக நம்முடைய நேரத்தை செலவழிப்போம்.

நீங்கள் இன்னமும் தேவனை பிடித்துகொண்டிருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கையின் ஒருபகுதியை மட்டும் தேவனுக்கு கொடுத்து மற்றவைகளை உங்கள் ஆளுகையில் தொடர்ந்து வைத்திருக்க முயற்சிக்கிறீர்களா? நண்பனே உங்கள் ஜெபவாழ்க்கை தேவனுடைய ராஜ்யத்திற்கு, நிபந்தனையற்ற விசுவாசத்திற்கு கட்டுப்படும்வரை - எந்த பலனுடையதாகவும், வல்லமையுடையதாகவும் இருக்காது.

தலைவர்:

நேரம் அனுமதித்தால் குழுவை ஜெபத்தில் நடத்தவும். தேவனுடைய ராஜ்யம் துரிதமாய் வருவதற்கு உண்மைப்பற்றுடன் இருக்க தடைபண்ணும் காரியங்களை வெளிப்படுத்தும்படி தேவனை தங்கள் இருதயத்தை ஆராயும்படி அழைக்க உற்சாகப்படுத்தவும். தேவனுடைய ராஜ்யத்தில் உண்மையாகவே இருக்கிறார்களா என்று தங்களை தாங்களே சோதிக்கும்படி உற்சாகப்படுத்தவும்.

# வாரம் நான்கு

கடந்த மூன்று வாரமாக ஜெபத்தை குறித்து வேதம் என்ன கூறுகிறது என்றும் தேவனை நாம் எப்படி நெருங்கலாம் என்றும் பார்த்துவருகிறோம். இயேசுவின் சீஷர்கள் தங்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டபோது இயேசு அவர்களுக்கு கொடுத்த மாதிரி ஜெபத்தை நம்முடைய எல்லைகோடாக பயன்படுத்துகிறோம்.

கர்த்தரின் ஜெபத்தில் முதல் இரண்டு பகுதிகளாகிய ஆராதனை மற்றும் விசுவாசத்தின் வெளிப்படுத்துதலை நாம் தியானிக்கிறோம். "நமக்கு தேவையானவற்றை தேவனிடம் சொல்வதற்கான பகுதி இங்கே எப்போது கிடைக்கும்" என்று நாம் ஆச்சரியப்பட்டிருக்கலாம்.

ஆனால் நாம் துவங்குவதற்கு முன் நாங்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாமா? எப்போதாவது தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுப்பதை குறித்து ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? இரகசியமாக உங்கள் ஆத்துமாவின் ஆழத்தில் உங்களுக்கு உண்மையாக தேவைப்படுகிறவற்றைக் கேட்க பயந்ததுண்டா? கொடுக்கமாட்டார், கொடுக்கமுடியாது என்ற பயம் எழுந்ததுண்டா? நண்பரே, அவரால் முடியும் அவர் செய்வார். தேவன் புதிய வழிகளில் புதிதாக செய்வதற்கு சாத்தியமாக இந்த வாரபோதனை நமக்கு ஒரு கண்களைத் திறக்கும் அனுபவமாக இருக்க ஜெபிப்போம்.

## உற்றுநோக்கு

மத்தேயு 6:11ல் "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்" என்று ஜெபித்தார். இந்த எளிதான ஜெபம், நம்முடைய விண்ணப்பங்களை தேவனிடம் சொல்வதும் ஜெபத்தில் அடங்கியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்த ஜெபத்தின் பகுதிக்கு உதவியாக உள்ள இன்னும் சில வசனங்களைப் பார்க்கலாம்.

தலைவர்: லூக்கா 11:1,5-10வரை சத்தமாக வாசிக்கவும். பின்வருவனவற்றை செய்வதற்கு குழுவிடம் சொல்லவும்.

### லூக்கா 11:1, 5-10

1. அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்.

5. பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே,

6. என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

7. வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவுசெய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான்.

8. பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதி-னிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

9. மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது

- "கேட்டு", "கேட்கிற", "தேடுதல்", "தட்டுதல்" என்று வரும் இடங்களில் வளைவு கோடு வரையவும்.
- 'ஜெபம்' குறித்து வருகின்ற இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.
- 'வருந்தி' என்று வருகின்ற இடங்களில் அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் ஜெபத்தைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?
- நாம் எப்படி வருந்தி கேட்க வேண்டும்? உங்கள் பதிலை விளக்கவும்.
- இந்த வேதபகுதியில் நமக்கு உள்ள வாக்குத்தத்தம் என்ன?
- மற்றவர்கள் சார்பாக ஜெபிக்கும்போது பரிந்துபேசும் பழக்கத்தை ஏற்படுத்த, இந்த வேத பகுதியில் எவ்விதமான உதவியை காண்கிறீர்கள்?

- நீங்கள் கேட்கிறீர்களா? நீங்கள் தேடுகிறீர்களா? நீங்கள் தட்டுகிறீர்களா? அல்லது சும்மா இருந்துவிட்டு நம்பிக்கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பதில் என்ன வித்தியாசத்தை உருவாக்குகிறது?

தலைவர்: குழுவில் உள்ள ஒருவர் தன் சொந்த வாழ்க்கையில் ஜெபத்தில் வருந்தி கேட்டு, தேவனிடமிருந்து பதிலை பெற்றுக் கொண்ட தருணத்தை குறித்து பகிர்ந்துகொள்ள அழைக்கவும்.

## உற்றுநோக்கு

தலைவர்: 1 யோவான் 5 : 14, 15 மற்றும் யோவான் 15 : 7ஐ சத்தமாக வாசிக்கவும்.

- “கேட்டல்”, “கேட்டவைகள்”என்று வருகிற இடங்களில் “ஜெ” என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த இரண்டு வேத பகுதிகளிலும் ஏதாகிலும் தொடர்பை உங்களால் கண்டுகொள்ளமுடிகிறதா?

- இந்த வசனங்களின்படி ஜெபம் கேட்கப்படுவதற்கும், பதிலளிக்கப்படுவதற்கும் எது தேவை?

உங்களுக்குக்
கொடுக்கப்படும்;
தேடுங்கள், அப்பொழுது
கண்டடைவீர்கள்;
தட்டுங்கள், அப்பொழுது
உங்களுக்குத்
திறக்கப்படும்.

10. ஏனென்றால்,
கேட்கிறவன் எவனும்
பெற்றுக்கொள்ளுகிறான்;
தேடுகிறவன்
கண்டடைகிறான்;
தட்டுகிறவனுக்குத்
திறக்கப்படும்.

### I யோவான் 5:14-15

14. நாம் எதையாகிலும்
அவருடைய
சித்தத்தின்படி கேட்டால்,
அவர் நமக்குச்
செவிகொடுக்கிறா-
ரென்பதே அவரைப் பற்றி
நாம் கொண்டிருக்கிற
தைரியம்.

15. நாம் எதைக்
கேட்டாலும்,
அவர் நமக்குச்
செவிகொடுக்கிறாரென்று
நாம்
அறிந்திருந்தோமானால்,
அவரிடத்தில் நாம்
கேட்டவைகளைப்
பெற்றுக்கொண்டோ-
மென்றும்
அறிந்திருக்கிறோம்.

**யோவான் 15 : 7**

7. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

**பிலிப்பியர் 4 : 6**

6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.

- இந்த நிபந்தனைகளை நாம் செயல்படுத்தினால், எதை நாம் எதிர்பார்க்கலாம்?

- நாம் கேட்பவைகளுக்கு ஏதாகிலும் எல்லை உண்டா? இருக்குமானால் அவை என்ன?

## உற்றுநோக்கு

தலைவர்: பிலிப்பியர் 4 : 6ஐ சத்தமாக வாசிக்கவும்.

- ‘ஜெபம்’ என்று வரும் இடங்களில் ‘ஜெ’ என்று குறிப்பிடவும்.

**உட்கருத்து**

(ஞாபகப்படுத்துவதிற்காக) - பணிந்து கேட்பது அல்லது கெஞ்சி கேட்டல் என்பது “தயவிற்காக, இரக்கத்திற்காக, கிருபைக்காக” கேட்பது ஆகும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியின்படி எதற்காக நாம் கவலைப்பட வேண்டும்?

- கவலைப்படுவதற்கு பதிலாக நாம் செய்யவேண்டியது என்ன?

- இங்கு வசனமானது எளிதில் விளங்க கூடியதாய் இருக்கிறது. உங்கள் விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் கவலையோடு இருக்கிறீர்களா? பயப்படுகிறீர்களா? அச்சமுடையவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது நீங்கள் கேட்கிறீர்களா? உங்கள் பதில் உங்கள் வாழ்க்கையிலேயும், உங்கள் ஜெபத்திலேயும் எந்த மாறுதலை ஏற்படுத்துகிறது?

## உற்றுநோக்கு

இப்போது உங்களுக்கு கேட்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்குமே!

ஆனால் தேவனுடைய சித்தத்தை நீங்கள் எப்படி அறிந்து கொள்வீர்கள்? நீங்கள் கேட்கிறது தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டது என்று நீங்கள் எப்படி நம்பமுடியும்?

தலைவர்: ரோமர் 12:1,2ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'நீங்கள்', 'உங்கள்' என்று வரும் இடங்களில் வட்டம் வரையவும்.
- 'சித்தம்' என்று வரும் இடங்களில் இரண்டு அடிக்கோடிடவும். ═══

## கலந்துரையாடு

- நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்பது என்ன?

- உங்கள் சரீரங்களை பலியாக ஒப்புகொடுத்தல் என்பதின் பொருள் என்ன?

### ரோமர் 12 : 1 - 2

1. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டு-மென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறே-ன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

2. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

- 2வது வசனம் நம்மிடம் எதை செய்ய சவால் விடுகிறது? உங்கள் அனுதின வாழ்க்கையில் அது எப்படி தோன்றுகிறது? உங்கள் பதிலை விளக்கவும்.

- கடைசியாக இந்த இரண்டு பொறுப்புகளுக்கும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுதலுக்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன?

**மீகா 6 : 8**

8. மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

## உற்றுநோக்கு

தலைவர்: மீகா 6:8ஐ சத்தமாக வாசிக்கவும்.

- "என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" என்ற சொற்றொடரில் அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- தேவன் நம்மிடத்தில் உரிமையோடு கேட்கிற மூன்று காரியத்தை வரிசைப்படுத்தவும்.

- இது உண்மையானது என்று நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்? நமக்கு அதை கூறியது யார்?

- இந்த வசனத்தின்படி, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தம் என்ன?

- பிறருக்காக ஜெபத்தில் வேண்டுதல் செய்வதில் இந்த அறிவு எவ்விதத்தில் உங்களுக்கு உதவி செய்கிறது?

## உற்றுநோக்கு

தலைவர்: சங்கீதம் 119:1-8ஐ சத்தமாக வாசிக்கவும்.குழுவிடம் பின்வருவனவற்றை செய்யும்படி கூறவும்.

- 'பாக்கியவான்கள்' என்று வரும் இடங்களில் அடிக்கோடிடவும்.
- கர்த்தருடைய வார்த்தையை குறிப்பிடுகின்ற 'வேதம்', 'சாட்சிகள்', 'அவருடைய வழிகள்', 'கட்டளைகள்', 'பிரமாணங்கள்', 'கற்பனைகள்', 'நீதிநியாயங்கள்' என்கிற சொற்றொடர்களில் "வே" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- 'பாக்கியவான்கள்' என்பதை விளக்கவும். ஏன் அவர்கள் பாக்கியவான்கள்?

- ஒருவேளை நீங்கள் இதை தவறவிட்டுவிட்டால் தேவனுடைய வார்த்தைக்கும், பாக்கியவான்களாயிருப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன?

### சங்கீதம் 119 : 1 - 8

1. கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

2. அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

3. அவர்கள் அநியாயம் செய்வதில்லை, அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்.

4. உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர்.

5. உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி, என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும்.

6. நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும் போது, வெட்கப்பட்டுப் போவதில்லை.

7. உம்முடைய நீதிநியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்.

8. உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன்; முற்றிலும் என்னைக் கைவிடாதேயும்.

- ரோமர் 12:1,2 விசுவாசிகளாகிய நாம் நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகவும், நம்முடைய சரீரங்களை ஜீவபலி யாக ஒப்புகொடுப்பதற்கும் பொறுப்புடையவர்களாய் இருக்கிறோம்.நீங்கள் வாசித்த சங்கீதம் 119ல் உள்ள வசனங்களின்படி, இந்த பொறுப்பை எடுத்து செல்வதற்கு தேவனுடைய வார்த்தை எந்த பங்கை நம்மில் வகிக்கிறது?

## உற்றுநோக்கு

நாம் படித்ததில், நம்முடைய விண்ணப்பங்களை அவரிடம் ஒப்புக்கொடுக்கும்படி தேவன் வற்புறுத்துவதையும், நாம் தேவனுடைய சித்தத்தின்படி எதை கேட்டாலும் அவர் நமக்கு செவிகொடுக்கிறார் என்று வாக்குத்தத்தம் செய்தருளினதையும் காட்டுகிறது. அவருடைய வேதத்தை அறிந்துகொள்வதன் மூலம், அவருடைய சித்தத்தை நாம் அறிந்துகொள்ள முடியும் என்று கற்றுகொண்டோம். அவருடைய வார்த்தையை நாம் படிக்கும்போது, அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருந்து, எவ்வாறு நாம் ஜெபிக்க வேண்டும் என்று நாம் அறிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம்.

ஆனால் நீங்கள் ஜெபித்தும் கேட்டுக் கொண்டவைகளின்படியேயும் காரியங்கள் நடைபெறாத நேரங்கள் எப்படி உள்ளது? ஒருவர் குணமடையாத சூழ்நிலையிலும் ஒரு பிள்ளை தன் துன்மார்க்கத்திலேயே தொடர்ந்து நடக்கும் நிலையிலும் நீங்கள் உங்கள் பிரியமானவர்களுக்காக ஜெபித்தும் அவர்கள் மரித்துபோனதுமான நேரங்கள் எப்படி?

நீங்கள் எதிர்பார்த்தபடி உங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கான சாத்தியமாய் உள்ள பல காரணங்களை குறித்து பார்ப்போம்.

தலைவர்: 2 கொரி 12 : 7 - 9ஐ சத்தமாக வாசிக்கவும்.

- இந்த வேதப்பகுதியை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுலை குறிக்கும் "எனக்கு", "என்னை", "நான்", "உனக்கு" என்று வரும் இடங்களில் வட்டமிடவும்.
- "வேண்டிக்கொண்டேன்" என்று வரும் இடத்தில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியின்படி பவுல் எந்த பிரச்சனைக்காக ஜெபித்தான்?

- இந்த பிரச்சனைக்காக அப்போஸ்தலன் எத்தனைமுறை ஜெபித்தான்?

- பவுலின் வேண்டுதலுக்கு தேவன் எவ்வாறு பதிலளித்தார்? ஏன் அவ்வாறு பதிலளித்தார்? பதிலை விளக்கவும்.

### 2 கொரிந்தியர் 12: 7-9

7. அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.

8. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.

9. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

## யாக்கோபு 4 : 1 - 4

1. உங்களுக்குள்ளே யுத்தங்களும், சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?

2. நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும்பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

3. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.

4. விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை-

## உற்றுநோக்கு

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற சபைக்கு அவர்கள் நடத்தைகளை குறித்த பல பிரைச்சனைகளை குறித்து கடிதம் எழுதினார்.

தலைவர்: யாக் 4:1-4ஐ சத்தமாக வாசிக்கவும்.

- "நீங்கள்", "உங்கள்" என்று வரும் இடங்களில் வட்டமிடவும்.
- "விண்ணப்பம்பண்ணுதல்" என்று வரும் இடங்களில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- யாக்கோபு ஒழுங்குப்படுத்துகின்ற ஜனங்களை குறித்து விளக்கவும். அவர்கள் வாழ்க்கையில் இருந்த பிரச்சனைகள் என்ன?

- இந்த வேத பகுதியின்படி அந்த பிரச்சனைக்கான வேர் எதுவாயிருந்தது?

- இந்த ஜனங்களுக்கு தேவையானது அல்லது ஒருவேளை தேவைப்படுகின்ற காரியங்கள் அவர்களிடம் இல்லாமல் இருந்தது ஏன்?

- அவர்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கான காரணங்களை கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

பின்வரும் வசனம் புருஷர்களுக்குரிய அறிவுரையாக இருந்தாலும் இது நம்முடைய நடத்தைக்கும் நம்முடைய ஜெபங்களின் பலன்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது.

தலைவர்: 1 பேதுரு 3 : 7ஐ சத்தமாக வாசிக்கவும்.

- “உங்கள்”, “நீங்கள்” என்ற வார்த்தைகளை வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- ஒரு புருஷனுடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்காதபடிக்கு தடைசெய்வது எது?

- இந்த கொள்கை எந்த ஒரு நபருக்கும் தொடர்புடையதா? உங்கள் பதிலை விளக்கவும்.

யென்று அறியீர்களா?
ஆகையால்
உலகத்துக்குச்
சிநேகிதனாயிருக்க
விரும்புகிறவன்
தேவனுக்குப்
பகைஞனாகிறான்.

## I பேதுரு 3 : 7

7. அந்தப்படியே
புருஷர்களே,
மனைவியானவள்
பெலவீன
பாண்டமாயிருக்கிற
படியினால், உங்கள்
ஜெபங்களுக்குத்
தடை வராதபடிக்கு,
நீங்கள் விவேகத்தோடு
அவர்களுடனே
வாழ்ந்து,
உங்களுடனேகூட
அவர்களும்
நித்திய ஜீவனாகிய
கிருபையைச்
சுதந்தரித்துக்
கொள்ளுகிறவர்களான
படியினால்,
அவர்களுக்குச்
செய்யவேண்டிய
கனத்தைச் செய்யுங்கள்.

# சுருக்கமாக

நான் எப்படி ஜெபிக்கிறேன்? குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதாவது சீஷர்கள் இயேசுவிடம் கேட்டதுமுதல், இது மனிதனின் கேள்வியாக உள்ளது. இந்த வாரம் விண்ணப்பத்திற்கும், வேண்டுதலுக்குமுரிய பகுதிகளை பார்த்தோம். அவருடைய சித்தத்தின்படி நாம் எதை கேட்டாலும் நாம் அதை பெற்றுக்கொள்வோம் என்கிற இயேசுவின் வாக்குத்தத்தத்தை வாசித்தோம். இந்த செய்தி உங்களுக்கு பயத்தை கொடுக்கிறதா? நாம் எதை கேட்கிறோமோ அதனை சத்தமாக கேட்பதற்கும் அவைகளை தேவன்மேல் வைப்பதற்கும் எப்போதாகிலும் பயப்பட்டிருக்கிறீர்களா? அவர் தவறாக எடுத்துகொள்வார் என்றோ? அவர் நம் வேண்டுதலை ஏற்கமாட்டார் என்றோ நீங்கள் கவலைப்பட்டதுண்டா? அது உங்கள் தவறாகத்தான் இருக்கும். கேளுங்கள்.

ஜேக் ஆர்தர், ப்ரீசெப்ட்ஸ் தலைவரும் உடன் நிறுவனருமானவர் தேவன் இன்னும் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் என்று விசுவாசித்து அந்த விசுவாசத்தோடு தினமும் வாழ்கிறவர். பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்கு எத்தனையோ எடுத்துகாட்டுகள் அவர் வாழ்க்கையில் அடங்கியுள்ளது.

சில வருடங்களுக்கு முன்பு "பாக்கெட் நியுடெஸ்டமன்ட் லீக்" என்னும் ஸ்தாபனத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது கிராமம் கிராமமாக பொதுவான மொழியில் சுவிசேஷத்தை விளக்கும் திரைப்படத்தை காண்பித்து வந்தார். ஸிம்பாபே நாட்டின் ஒரு கிராம தலைவரிடமிருந்து திரைப்படம் காண்பிப்பதற்கான அனுமதியை பெற்றபோது புயலோடு இடிமுழக்கத்தின் சத்தத்தையும் கார்மேகங்கள் வேகமாக நகர்வதையும் கவனித்தார். சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை காலநிலை தடைப்பண்ணுவதை விரும்பாமல் ஜேக்கும் அவரோடுகூட இரண்டு மிஷனெரிமார்களும் வாகனத்தின் அருகில் முழங்காற்படியிட்டார்கள். ஜேக், தேவனே உம்முடைய நாமமகிமைக்காக மழையை நிறுத்தும் என்று ஜெபித்தார். அவர்களைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட எல்லைவரை மழை நின்றது. முழு கிராமமும் இயேசுவை குறித்து கேள்விப்பட்டார்கள். அதன் விளைவுகள் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருந்தது. அந்த மக்களோடு பேசிமுடித்துவிட்டு அவ்விடம் விட்டு புறப்படும்போது புயல் பின்னாக நின்றதை அந்த மிஷனெரிகளால் பார்க்கமுடிந்தது. சாலையின் நடுவே ஒரு கோடு வரைந்ததைப்போன்று, ஒரு பக்கம் தூசி நிறைந்ததும் மறுபக்கம் சேறுநிறைந்த குட்டை அழுக்கடைந்த நீர் ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததாகவும் இருந்தது.

ஜேக் ஆர்தர் இன்னும் தேவன் ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார் என்று விசுவாசிக்கிறார். அவருடைய ஜெபவாழ்வில் அனுபவித்த எண்ணுக்கடங்காத ஆச்சரியமான பதில்களை எங்களால் பார்க்கமுடிகிறது. பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருப்பினும் நம் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட மெய்சிலிர்க்கும் ஜெபவாழ்க்கை சாத்தியமாக உள்ளது. தேவன் ஜேக்கை மற்றவர்களை காட்டிலும் நேசிப்பதால் தேவன் ஜேக்கின் ஜெபங்களுக்கு பதிலளிக்கவில்லை. பிதாவின் சித்தத்தை ஜேக் அறிந்து தான் ஜெபிக்கும்போது தேவன் கேட்கிறார் என்று விசுவாசித்து, அவர் ஜெபிப்பதனாலே அவருடைய ஜெபத்தை தேவன் கேட்கிறார்.

பரலோக பிதாவோடு நீங்கள் நெருங்க நெருங்க அவருடைய சித்தத்தையும், அவருடைய வழிகளையும், அவர் உங்கள்மேல் வைத்திருக்கிற அன்பையும் அதிகம் அதிகமாக நீங்கள் அறிந்துகொள்வீர்கள். தேவன் உங்களோடு, நேரத்தை செலவழிக்கக் காத்திருக்கிறார், அவரோடு பேசுங்கள்.

தலைவர்:

அமைதியாக ஜெபிப்பதற்கு குழுவினர்க்கு நேரத்தைக் கொடுத்து முடிக்கவும். அவர்களுக்கு தேவையான எதையாகிலும் தேவனிடம் கேட்பதற்கு அவர்களுக்கு அறைகூவுங்கள். இது ஒருவேளை பொருளாதாரதேவையாகவோ, சரீர சுகமோ, துன்மார்க்கமான அன்புக்குரியவரின் மனந்திரும்புதலோ அல்லது குறிப்பிட்ட நேரத்திற்கான சமாதானமாகவோ இருக்கலாம். இந்த வாரத்தின் ஒவ்வொரு நாளும் கேட்கும்படியாக அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அடுத்தவாரம் தேவனிடம் அவர்கள் கேட்டதும் விண்ணப்பித்ததுமானவைகளில் நடந்தவற்றைக் குறித்து பகிர்ந்துகொள்ள அவர்களை அழைக்கவும்.

# வாரம் ஐந்து

ஜெபத்தைக்குறித்த போதனையில் கடந்த வாரம், விண்ணப்பங்களின் பகுதியையும், நம்முடைய வேண்டுதல்கள் கிடைக்காததற்கு சில சாத்தியமான காரணங்களை குறித்தும் பார்த்தோம். இயேசுவின் நாமத்தினால் எதைக் கேட்டாலும் பிதாவானவர் பதிலளிப்பார் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தாலும் நம்முடைய விண்ணப்பங்கள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றதாக இல்லாமல் இருக்கும்போதோ அல்லது நம்முடைய உள்நோக்கங்கள் சுயநலமாக இருந்தாலோ பதிலை நாம் எதிர்பார்க்க முடியாது. கர்த்தருடைய ஜெபத்தின் கடைசி இரண்டு பகுதிகளாகிய பாவ அறிக்கை மற்றும் விடுதலைக்கான விண்ணப்பம் என்பவைகளைக் குறித்து இந்த வாரம் நாம் கற்றுக்கொள்ளும்போது, தேவனோடும் பிறரோடும் நமக்குரிய உறவு எவ்வாறு நம் ஜெபத்தின் பலனில் தாக்கம் உண்டாக்கும் என்பதை குறித்தும் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இந்த வாரத்தின் பாடங்களில் சில நமக்கு மிகவும் பழக்கமானவை. ஆனாலும் தேவனுடைய கண்ணோட்டத்தில் அவைகளை விளக்கமாக புரிந்துகொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## உற்றுநோக்கு

இயேசு மாதிரி ஜெபத்தை முடித்தவுடனே, ஜெபத்தில் அறிக்கையிடுதல் பகுதியை குறித்து அதிகமான போதனையைக் கொடுத்தார்.

தலைவர்: மத்தேயு 6 : 12, 14 - 15ஐ சத்தமாக வாசிக்கவும்.

- "மன்னிக்கிறது", "மன்னியும்" என்ற வார்த்தைகள் வரும் இடங்களில் "செவ்வகம்" ☐ வரையவும்.

## கலந்துரையாடு

- 12 மற்றும் 14 வசனங்களை ஒப்பிட்டு பார்க்கவும். இந்த பகுதியில் வசனம் 12ல் இயேசு "கடன்கள்" என்ற வார்த்தையை எந்த அர்த்தத்தில் கூறியிருப்பார் என்று நினைக்கிறீர்கள். உங்கள் பதிலை விளக்கவும்.

### மத்தேயு 6:12, 14-15

12. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

14. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

15. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

- குற்றமிழைப்பது அல்லது குற்றவாளி யாக்கப்படுவதை கடனோடு எப்படி ஒப்பிடுவீர்கள்?

- உங்களை காயப்படுத்திய அல்லது உங்களை குற்றப்படுத்திய பிறகு அவர்கள் உங்களிடம் கடன்பட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் உணர்ந்ததுண்டா? உங்கள் பதிலை விளக்கவும்.

- வசனம் 12ல் இயேசு நமக்கு முன்மாதிரியாய் காட்டித் தந்த இரண்டு செயல்கள் எவை?

- 14,15 வசனங்களின்படி, இயேசுவின் மாதிரியை நாம் பின்பற்றும்போது ஏற்படும் பலன் என்ன?

- வசனம் 15ன்படி, நாம் ஒருவரை மன்னிக்க மறுக்கும்போது நடப்பது என்ன என்பதைக் கலந்துரையாடவும்.

## உற்றுநோக்கு

நமக்கு பிறரோடு உள்ள உறவில் தேவன் எத்தகைய கருத்துடையவராய் இருக்கிறார்? பார்த்து தெரிந்துகொள்வோம்.

தலைவர்: மத்தேயு 5:23-24ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'நீ', 'உன்' என்ற வார்த்தைகள் வரும் இடங்களில் வட்டமிடவும்.
- 'காணிக்கை' என்ற வார்த்தையில் இரட்டை அடிக்கோடிடவும்.

**மத்தேயு 5 : 23 - 24**

23. ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,

### உட்கருத்து

பலிபீடத்தில் உங்கள் காணிக்கையை செலுத்துவது என்பது இன்று நாம் செலுத்தும் ஆராதனையைக் குறிக்கிறது.

24. அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

## கலந்துரையாடு

- இந்த பகுதியில் இயேசுவானவர் ஆராதிப்பதற்கு கொடுக்கும் தகுதிகள் என்ன?
- தேவனோடு இருக்கிற உறவிலும், பிறரோடு இருக்கிற உறவிலும், எப்படிப் பட்ட தொடர்பை இந்த வசனங்களில் நீங்கள் காண்கிறீர்கள்?

## உற்றுநோக்கு

கடந்தவாரம் ஒரு கணவன் மனைவியை நடத்தும் விதம் எவ்வாறு அவன் ஜெபவாழ்க்கையை பாதிக்கிறது என்பதைக் குறித்துக் கற்றுக்கொண்டோம். இந்த தத்துவம் மற்ற உறவுகளுக்கும் ஒத்துபோகுமா?

**தலைவர்:** ரோமர் 12:10, 14-19,21ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'விசுவாசிகள் நாம் செய்யவேண்டிய காரியங்கள்' குறித்து வருகின்ற சொற்றொடர்களை அடிக்கோடிடவும்.

### ரோமர் 12:10,14-19,21

10. சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.

14. உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்.

15. சந்தோஷப் படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்.

16. ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களா-யிருங்கள்; மேட்டிமையானவைக-களைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்.

17. ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.

18. கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.

19. பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

21. நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

விசுவாசிகளாகிய நாம் “செய்யாதிருக்க” வேண்டிய காரியங்கள் என்று வரும் இடங்களில் இப்படி குறியிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் குறிப்பிடப் பட்டிருக்கும் விசுவாசிகளின் ஒழுக்க நிலை என்ன? நாம் செய்ய வேண்டியவைகள் எவை?

- நாம் எவைகளை செய்யக்கூடாது?

## உற்றுநோக்கு

பிறரோடு உள்ள நம் உறவையும், அவர்களை நாம் மன்னிக்கிறதையும், குற்றஞ்செய்யும்போது மன்னிப்பை எதிர்பார்ப்பதையும், தேவன் கருத்துடன் எடுத்துக்கொள்கிறார் என்பதை பார்த்தோம். நாம் ஏதாவது காரியத்தை செய்ய தவறுவது நம்முடைய ஜெபவாழ்க்கையை எதிர்மாறாக பாதிக்கமுடியும். நம்முடைய

ஜெபங்கள் தேவனோடுள்ள உறவில் எப்படிப்பட்ட தாக்கத்தையுடையது என்று நாம் பார்ப்போம்.

தலைவர்: ஏசாயா 59:1-2 மற்றும் சங்கீதம் 66:18ஐ சத்தமாக வாசிக்கவும்.

- அக்கிரமங்கள், பாவங்கள் போன்ற வர்த்தைகளில் ஒரு குறுக்குக்கோடு / வரையவும்.

## கலந்துரையாடு

- அக்கிரமம் என்று குறிக்கப்பட்ட இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன? நம்முடைய பாவம் தேவனோடுள்ள உறவை எவ்வாறு பாதிக்கிறது?

- நம்முடைய ஜெபங்களில் அறிக்கைபண்ணப்படாத பாவங்களினால் உண்டாகும் விளைவு என்ன?

- உங்கள் தற்போதைய ஜெபவாழ்க் கையை யோசித்து பார்க்கவும். உங்கள் ஜெபங்களை தடைசெய்கிற காரியங்கள் ஏதாகிலும் உண்டா? அவை என்ன?

தலைவர்: இந்த கேள்வியை ஆழ்ந்து சிந்தனை செய்யும்படி குழுவிற்கு நேரத்தைக் கொடுக்கவும்.

### ஏசாயா 59 : 1 - 2

1. இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

2. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

### சங்கீதம் 66 : 18

18. என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

## I யோவான் 1 : 9

9. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

## உற்றுநோக்கு

இவ்வாறாக தேவனுக்கு விரோதமான நம்முடைய பாவங்கள், நாம் மற்றவர்களை கேவலமாக நடத்துதல், மற்றவர்களை மன்னிக்க மறுத்தல் ஆகியவை, நம் ஜெபத்தை தேவன் கேட்பதற்கு தடையாக அமையும் என்பதைப் பார்த்தோம். நாம் பாவங்களை, கெட்ட எண்ணங்களை நம் இருதயத்தில் வளரவிடும்போது, நாம் கூறவேண்டியதை அவர் கவனிக்கமாட்டார்.இந்த பிரச்சனைக்கு நாம் எப்படி தீர்வு காண முடியும்?

தலைவர்: 1யோவான் 1:9ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'பாவங்கள்' என்ற வார்த்தையில் குறுக்குக் கோடு போடவும். /
- 'மன்னிப்பு' என்ற வார்த்தையில் ஒரு கட்டம் வரையவும். ☐

**உட்கருத்து**

நம்முடைய பாவங்களை அறிக்கையிடுதல் என்பது தேவனுடைய சட்டங்களையும் அவர் சித்தத்தையும் மீறியதை அப்படியே கூறுவது ஆகும். சுருக்கமாக அதன் பொருள் நான் தவறு செய்தேன் என்று ஒப்புகொள்வதாகும்.

## கலந்துரையாடு

- நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிடும்போது நடப்பது என்ன?

- அது இவ்வளவு எளிமையானது என்றால் ஏன் பலர் தேவனுடைய மன்னிப்பை பெற்றுக்கொள்ள நாடுவதில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். உங்கள் பதிலை விளக்கவும்.

- நீங்கள் உங்கள் உள்ளத்தின் ஆழத்திலே தவறு செய்தீர்கள் என்று அறிந்திருக்கும்போது உங்கள் செயலை நியாயப்படுத்த எப்போதாகிலும் முயற்சி செய்திருக்கிறீர்களா? இப்போது தேவன் உங்களை மன்னிப்பதற்கு ஏன் கேட்கக்கூடாது.

## உற்றுநோக்கு

பலனளிக்கும் ஜெபத்தை விரும்புகிறவர்களுக்கு 'அறிக்கையிடுதல்' என்பது எவ்வளவு சிக்கலானதும், முக்கியமானதுமான பகுதி என்று பார்த்தோம். இப்போது கடைசி பகுதிக்கு நேராக நம் கவனத்தை திருப்பும்போது மறுபடியும் இயேசுவின் ஜெபத்திலுள்ள கடைசி பகுதியாகிய 'விடுதலைக்காக வேண்டுதல்' குறித்துப் பார்ப்போம்.

தலைவர்: மத்தேயு 6:13ஐ சத்தமாக வாசிக்கவும்.

- குழுவில் உள்ளவர்கள் 'இரட்சித்துக் கொள்ளும்' என்ற வார்த்தையில் மேல்நோக்கிய அம்புக்குறி ↑ போட சொல்லவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனத்தில் இயேசு கேட்பது என்ன?

**மத்தேயு 6 : 13**

13. எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

- தீமையின் உண்மைநிலையைக் குறித்து இந்த பகுதி நமக்கு என்ன போதிக்கிறது?

- தீமையினின்று பாதுகாக்கப்படவும், சோதனையினின்று இரட்சிக்கப்படவும் நாம் என்ன செய்ய முடியும்?

### மத்தேயு 26 : 41

41. நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

### I கொரிந்தியர் 10 : 13

13. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே-யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

## உற்றுநோக்கு

தலைவர்: மத்தேயு 26:41 மற்றும் 1கொரி 10:13ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'சோதனை', 'சோதிக்கப்படுதல்' என்ற வார்த்தைகள் வரும் இடங்களில் வளை அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- 'சோதனை' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன?

- உங்கள் ஜெபவாழ்க்கையை இந்த தகவல் எவ்வாறு பாதிக்கும் என்பதை கலந்துரையாடவும்.

- பிறருக்காக எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து இந்த வசனங்கள் உங்களுக்கு என்ன உட்கருத்தை கொடுக்கிறது?

## உற்றுநோக்கு

இயேசு நமக்காக, அவருடைய சீஷர்களுக்காக ஜெபிக்கிற ஜெபம் யோவான் 17ல் அடங்கியுள்ளது. இயேசு நமக்காக வேண்டுதல் செய்யும் விதம் நம்முடைய சொந்த ஜெபவாழ்க்கைக்கு ஒரு எடுத்துகாட்டாக அமைகிறது.

தலைவர்: யோவான் 17:14-19ஐ சத்தமாக வாசிக்கவும்.

- இயேசுவைக் குறிக்கும் 'நான்', 'என்னை', 'நானும்', என்ற வார்த்தைகளில் சிலுவை குறியிடவும் ✝
- 'அவர்களை', 'அவர்களும்' என்று வரும் வார்த்தைகளில் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- இந்த ஜெபம் இயேசு கைது செய்யப் படுவதற்கும் சிலுவை மரணத்துக்கு சற்றுமுன், இயேசுவின் உலக வாழ்க்கையின் கடைசி தருணத்தில் நிகழ்ந்த ஜெபமாகும். இந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்ட நேரம், இந்த ஜெபத்தின் முக்கியத்துவம் எவ்வளவு என்று காட்டுகிறது?

- இயேசு அவருடைய கடைசி மணி நேரங்களில் எப்படி நமக்காக வேண்டுதல் செய்தார்?

### யோவான் 17 : 14 - 19

14. நான் உம்முடைய
வார்த்தையை
அவர்களுக்குக்
கொடுத்தேன்; நான்
உலகத்தானல்லாதது
போல அவர்களும்
உலகத்தாரல்ல;
ஆதலால் உலகம்
அவர்களைப்
பகைத்தது.

15. நீர் அவர்களை
உலகத்திலிருந்து
எடுத்துக்கொள்ளும்படி
நான்
வேண்டிக்கொள்ளாமல்,
நீர் அவர்களைத்
தீமையினின்று
காக்கும்படி வேண்டிக்
கொள்ளுகிறேன்.

16. நான்
உலகத்தானனல்லாதது
போல, அவர்களும்
உலகத்தாரல்ல.

17. உம்முடைய
சத்தியத்தினாலே
அவர்களைப்
பரிசுத்தமாக்கும்;
உம்முடைய வசனமே
சத்தியம்.

18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

19. அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

- நமக்காக நாம் ஜெபிக்கிற ஜெபங்களை பாதிக்கிற எத்தகைய விவரங்களை இங்கே காண்கிறீர்கள்? பிறருக்காக நாம் ஜெபிக்கிற ஜெபங்களில் எத்தகைய பாதிப்புகளை இங்கே காண்கிறீர்களா?

- கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் வரும் போராட்டத்தைக் குறித்து இந்த வேதபகுதி கூறுவதை கலந்துரையாடவும். இது உண்மையா? இயேசுவின் கண்ணோட்டமும், பதிலும் எப்படி இருந்தது?

## சுருக்கமாக

இவ்வாறாக இந்த வாரம் அறிக்கைபண்ணுதல் குறித்த போதனையில், தேவன் 'மன்னிப்பை' குறித்த விஷயத்தை மிகவும் முக்கியப்படுத்துவதை பார்த்தோம். இயேசுவின் மூலமாய் நமக்கு அளிக்கப்பட்ட மன்னிப்பின் அடிப்படையில் நாம் பிதாவானவரிடம் கெஞ்சுவதற்கும், ஜெபிப்பதற்கும், கூப்பிடுவதற்கும் வருகிறோம். அவர் அளித்த அதே மன்னிப்பை பிறருக்கு அளிக்கும்படியாக அவர் விரும்புகிறார்.

சில நேரங்களில் "அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்று உமக்கு தெரியாது, எவ்வளவு மோசமாக அவர்கள் என்னை புண்படுத்தினார்கள் என்று உமக்கு தெரியாது" என்று சொல்வதற்கு நீங்கள் தூண்டப்படலாம். மாறாக "இன்று மன்னிப்பு இல்லை. உனக்கு நான் எதையும் செய்யமாட்டேன். நீ என்னை எவ்வளவு மோசமாக காயப்படுத்தினாய் என்று நீ யோசிக்கவில்லை" என்று திடீரென பரத்திலிருந்து ஒரு சத்தம் கேட்கப்பட்டால் அது எப்படி திகில் நிறைந்ததாய் இருக்கும்? இப்படி உங்களை குறித்து தேவன் கூறாதது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லையா?அப்படி அல்லாமல், அவர் நம்மை நேசிக்கிறார். நம்மை மன்னிக்கிறார். நாமும் பிறரை அதே இரக்கக் குணத்தோடு நடத்துவதற்கு தேவன் எதிர்பார்க்கிறார்.

உங்கள் ஜெபவாழ்க்கை குன்றிய நிலையிலோ, பரவசமற்ற நிலையிலோ அல்லது மரித்த நிலையிலோ இருந்தால் உங்கள் இருதயத்தை ஆராய்ந்து, மன்னிக்காமலிருக்கும் பகுதிகளை வெளிப்படுத்தும்படி கேளுங்கள். எங்களுடைய அனுபவத்தில், நீங்கள் கேட்கும்போது பரிசுத்த ஆவியானவர் விரைவாக அவற்றை உங்களுக்கு காண்பிப்பார். உங்கள் வாழ்க்கையில் மன்னிக்காத நபர் எவரேனும் இருப்பாரெனில், பின்வரும் எளிய செயல்களை பின்பற்றவும்:

1. அவர்களை நீங்கள் மன்னிக்காததால் உங்களுக்கு மன்னிக்கும்படி உங்களுக்காக தேவனிடம் கேட்கவும்.
2. ஜெபத்தில் உண்மையான அர்த்தத்தோடு, நீங்கள் அவர்களை மன்னித்ததாக தேவனிடம் கூறவும்.
3. உங்களை காயப்படுத்தினவர்களுக்கு நேராக உங்கள் இருதயத்தை மாறுதலடையச் செய்ய தேவனிடம் கேளுங்கள்.
4. தேவன் பாரத்தை நீக்கும் வரை அந்த நபருக்காக ஜெபிக்கவும்.

அறிக்கையிடுதலோடு நமது ஜெபத்தில் விடுதலையின் (இரட்சிப்பின் பாதுகாப்பு) பகுதியைக் குறித்துப் பார்த்தோம். இன்றைய சமுதாயத்தில் விடுதலையைக் குறித்த கருத்து சற்று வினோதமானது, இயற்கைக்கு மாறுபட்டதும் கூட. அநேக கிறிஸ்தவ வட்டாரங்களில் கூட தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்கிற ஜெபம் அபூர்வமாகவே பயன்படுத்தப்படுகிறது. எப்படியிருந்தாலும் நீங்கள் பார்த்ததுபோல, அது உண்மையாக இயேசு நமக்காக ஜெபித்த ஜெபம்: "நீர் அவர்களை தீமையினின்று காத்துக்கொள்ளும்" யோவான் 17:15 என்பது.

நண்பனே! எதிரியானவன் நிஜமாகவே உள்ளான். உங்கள் ஆத்துமாவின் சத்துரு சாத்தான். அவன் உங்களை பகைத்து உங்கள் வாழ்க்கைக்காக பயங்கரமான திட்டங்களை வைத்திருக்கிறான். அவன் இருப்பது உண்மையும், அவன் பலமுள்ளவனுமாயிருக்கிறான். நம்முடைய பாதுகாப்பு வானங்களையும் பூமியையும் படைத்தவரும் ஒரே மெய் தேவனுமாயிருப்பவரை அறிந்துகொள்வதின் மூலமாயும், அவரைநோக்கி கூப்பிடுவதன் மூலமாகவும் வருகிறது. இயேசு இதை அறிந்திருந்ததால், அவர் நம் பாதுகாப்பிற்காக நம்மை ஜெபிக்கச் சொன்னார்.

சேனைகளின் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறீர்களா? அவரிடம் தீமையினின்று உங்களை இரட்சித்துகொள்ள கேட்கிறீர்களா? உங்கள் ஜெபவாழ்க்கையில் உங்கள் மனைவி அல்லது கணவர், உங்கள் பிள்ளைகள், உங்கள் பெற்றோர், உங்கள் நண்பர்கள், உங்கள் சபைத் தலைவர்கள் விசேஷமாக உங்கள் போதகர் என்பவர்களுக்கான வேண்டுதல் அடங்கியுள்ளதா? 'விடுதலைக்கான வேண்டுதலை' உங்கள் ஜெபத்தின் பொதுவான பகுதியாய் செய்யும்படி உங்களை வற்புறுத்துகிறோம். "தேவனே தீமையினின்று அவர்களை இரட்சித்துக்கொள்ளும், சத்துருவினிடமிருந்து அவர்களை பாதுகாத்தருளும்."

**தலைவர்:** உங்கள் குழுவை ஜெபத்தில் நடத்துங்கள் அல்லது அவர்கள் அமைதியாக ஜெபிக்க நேரத்தை கொடுங்கள். பின்பு தேவன் இந்த வாரத்தின் போதனையின்போது தேவன் உங்களுக்கு காண்பித்ததைக் குறித்து குழுவிடம் பகிர்ந்துகொள்ள யாராவது இருப்பின் அதற்கு வாய்ப்பளிக்கவும்.

# வாரம் ஆறு

கடந்த சில வாரங்களாக ஜெபத்தை தேவனோடு கிட்டிச்சேருவது என்று வரையறுத்ததுமன்றி இயேசுவின் ஜெபத்தை நமது ஜெபத்தின் முக்கிய பகுதிகளுக்கு வழிகாட்டியாக பயன்படுத்தினோம். இந்த வாரம் தேவனுடைய இருதயத்துக்கு அருகில் நம்மை கொண்டுசெல்லும் வேத வார்த்தையிலுள்ள சில வேதபகுதிகளை நாம் சிந்திக்கப் போகிறோம். அந்த வேதபகுதிகள் மேலும் ஜெபத்தைக் குறித்த உட்கருத்துகளை கொடுக்கக் கூடியதும், அவருடைய இருதயத்துக்கு அருகே நம்மை கொண்டு செல்லக்கூடியதுமாய் இருக்கும்.

தலைவர்: நேரம் இருந்தால் ஒவ்வொரு எடுத்துகாட்டும் எப்படி தேவனுடைய ஜெபத்தோடு தொடர்புடையது அல்லது ஜெபத்தை குறித்து நாம் புரிந்துகொள்வதற்கு ஏதுவாய் புதிய பரிமாணத்தை எவ்வாறு சேர்க்கிறது என்றும் கலந்துரையாடவும்.

### II கொரிந்தியர் 1 : 20

20. எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.

## உற்றுநோக்கு

2கொரி 1:20ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'வாக்குத்தத்தங்கள்' என்ற வார்த்தையில் மேகம்போன்று வரையவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களுக்கு தேவன் எவ்வாறு பதிலளிப்பார்?

- ஜெபிப்பது அல்லது தேவனுடைய வாக்குத்தத்தங்களை வேண்டி கேட்பது பலனளிக்குமா? ஏன்?

**யாத்திராகமம் 32 : 9 - 14**

9. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்.

10. ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

11. மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன?

12. மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும்பொருட்டே அவர்களைப்

## உற்றுநோக்கு

நம்முடைய ஜெபவாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பங்கை யோசித்து பார்க்கும்போது, மோசேக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உரையாடலையும் சேர்த்துபார்க்கலாம். இந்த தொடர்பு இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு புறப்பட்டவுடன் நடந்தது. தேவனுடைய அற்புதங்களைக் கண்டும், அவருடைய இரக்கத்தை அநுபவித்த போதும் அவர்கள் மீண்டும் மீண்டும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து ஏறக்குறைய ஒவ்வொரு முறையும் அவரை சோதித்தார்கள்.

தலைவர்: யாத் 32:9-14ஐ சத்தமாக வாசிக்கவும்.

- ‘கெஞ்சிப் பிரார்த்தித்தான்’ என்ற வார்த்தையில் ‘ஜெ’ என்று குறிப்பிடவும்.
- ‘ஆணையிட்டு’ என்ற வார்த்தையை சுற்றிலும் மேகம் போன்று வரையவும்.

தலைவர்: யாத் 32:9-14ஐ மீண்டும் வாசிக்கவும்.

- இந்த முறை மோசே தேவனோடு செய்யும் ஒவ்வொரு ‘விண்ணப்பங்களிலும்’ அடிக்கோடிடவும். ______

## கலந்துரையாடு

- எகிப்திலிருந்து தேவன் கொண்டு வந்த இஸ்ரவேலர்களுக்கு தேவன் செய்ய நினைத்திருந்த காரியம் என்னவென்று தேவன் மோசேயோடு கூறினார்? ஏன்?

- வசனம் 10ல் தேவன் மோசேக்கு கொடுப்பதாக கூறியது என்ன?

- நீங்கள் எப்படி தேவனுக்கு பதிலளிப்பீர்கள்?

- மோசேயின் பதிலை விளக்கவும் எந்த அடிப்படையில் அவனுடைய விண்ணப்பம் இருந்தது?

- 12ம் வசனத்தில் எப்படிப்பட்ட அக்க றையை மோசே கொண்டிருந்தான்?

- 13ம் வசனத்தில் மோசே தேவனுக்கு நினைவுபடுத்தியது என்ன?

- மோசேயின் கெஞ்சி கேட்ட பிராத்தனை வெற்றியடைந்ததா?

புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும்.

13. உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான்.

14. அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்.

## ஆதியாகமம் 18 : 22 - 33

22. அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.

23. அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?

24. பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள்; அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள்நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ?

25. துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூ ரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ என்றான்.

26. அதற்குக் கர்த்தர்: நான் சோதோமில்

## உற்றுநோக்கு

நாம் பார்த்துக்கொண்டிருப்பது போல, மோசே அவனுடைய ஜனங்களுக்காக ஜெபத்தில் வேண்டிக்கொண்டார். தேவனுடைய குணாதிசயத்தையும் வாக்குத்தத்தங்களையும் அடிப்படையாக கொண்டு விண்ணப்பங்களை ஏறெடுத்தான். 'மன்றாட்டைக்' குறித்த வேறொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். ஆபிரகாம் சோதோம் கொமோராவின் மக்களுக்காக வேண்டுகிறதை பார்க்கிறோம். அந்த மக்களோடு ஆபிரகாமின் தம்பி மகன் லோத்தும் வாழ்ந்து வந்தான்.

தலைவர்: ஆதி 18:22-33ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'கர்த்தர்' என்று வரும் இடங்களிலும் 'கர்த்தரைக்' குறிக்கும் இடங்களிலும் முக்கோணம் இடவும்.
- 'அழிப்பீரோ' என்று வரும் இடங்களில் ஒரு கட்டம் வரையவும்.
- 'அழிப்பதில்லை' என்று வரும் இடங்களில் கட்டத்தில் ஒரு குறுக்குக்கோடு வரையவும்.

## கலந்துரையாடு

- ஆபிரகாமின் வேண்டுதலிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்ட பண்புகள் என்ன?

- வசனம் 25ன்படி ஆபிரகாமின் மன்றாட்டுக் கான அடிப்படை எதுவாயிருந்தது? அது அவனுக்கு தேவனோடுள்ள உறவை குறித்து வெளிப்படுத்துவது என்ன?

ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுவதையும் இரட்சிப்பேன் என்றார்.

27. அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்.

28. ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணமுழுவதையும் அழிப்பீரோ என்றான். அதற்கு அவர்: நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார்.

29. அவன் பின்னும் அவரோடே பேசி: நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

30. அப்பொழுது அவன்: நான்

இன்னும் பேசுகிறேன்; ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக; முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார்.

31. அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்; இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: இருபது நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

32. அப்பொழுது அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்; பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

33. கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு

- உங்கள் ஜெபவாழ்க்கையில் நீங்கள் அப்பியாசப்படுத்தக் கூடிய எந்த காரியங்களை, ஆபிரகாமுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உரையாடலிலிருந்து கற்றுக் கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

நெகேமியா என்கிற இன்னொரு பழைய ஏற்பாட்டு வீரனிடத்திலிருந்து, வல்லமையான ஜெபத்தைக் குறித்து என்ன கற்றுக்கொள்ள முடியும் என்று பார்ப்போம். பெர்சியா இராஜாவிடம் எருசலேமின் மதில்களை திரும்பக்கட்டுவதற்கு அனுமதி பெற போகும்போது தேவனுடைய உதவியை நாடின விதத்தைக் குறித்து பார்க்கப்போகிறோம்.

தலைவர்: நெகேமியா 1:5-11ஐ சத்தமாக வாசிக்கவும்.குழுவிடம் பின்வருவனவற்றை செய்யும்படி கூறவும்.

- 'தேவனை' குறிக்கும் இடங்களில் முக்கோணம் வரையவும்.
- 'ஜெபத்தை' குறிக்கும் வார்த்தைகளில் "ஜெ" என்று குறிப்பிடவும்.
- 'நினைத்தருளும்' என்கிற வார்த்தையில் மேகம்போல வரையவும்.

## கலந்துரையாடு

- இந்த ஜெபத்தில் நெகேமியா தேவனைக்குறித்து கூப்பிட்ட உயர்ந்த குணநலன்கள் எவை?

போய்விட்டார்;
ஆபிரகாமும்
தன்னுடைய
இடத்துக்குத்
திரும்பினான்.

### நெகேமியா 1 : 5 - 11

5. பரலோகத்தின்
தேவனாகிய கர்த்தாவே,
உம்மில் அன்புகூர்ந்து,
உம்முடைய
கற்பனைகளைக்
கைக்கொள்ளுகிறவர்க-
ளுக்கு,
உடன்படிக்கையையும்
கிருபையையும்
காக்கிற மகத்துவமும்
பயங்கரமுமான
தேவனே,

6. உமது
அடியாராகிய
இஸ்ரவேல்
புத்திரருக்காக
இன்று இரவும்பகலும்
உமக்கு முன்பாக
மன்றாடி, இஸ்ரவேல்
புத்திரராகிய நாங்கள்
உமக்கு விரோதமாகச்
செய்த பாவங்களை
அறிக்கையிடுகிற
அடியேனுடைய
ஜெபத்தைக்
கேட்கிறதற்கு,
உம்முடைய
செவி கவனித்தும்,

உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்.

7. நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்; நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதே போனோம்.

8. நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்களை ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்றும்,

9. நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக்

- நெகேமியா நினைவுகூரவும், நிறைவேற்றுவதற்கும் தேவனிடம் கேட்டுக்கொண்ட வாக்குத்தத்தங்கள் எவை?

- உங்கள் சொந்த ஜெபவாழ்க்கையில் அப்பியாசப்படுத்தக்கூடிய எந்த உட்கருத்துகளை, கொள்கைகளை இந்த வேத பகுதியில் காண்கிறீர்கள்?

கொண்டுவருவேன் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும்.

10. தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே.

11. ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக; இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி, இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப் பண்ணியருளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்.

**தானியேல் 9 : 4-6, 15-19**

கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவஅறிக்கைசெய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே.

5. நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்.

6. உமது நாமத்தினாலே எங்கள் ராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய சகலஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற் போனோம்.

## உற்றுநோக்கு

பழைய ஏற்பாட்டில் ஜெபத்தைக் குறித்த மற்றொரு எடுத்துக்காட்டையும் பார்க்கலாம். பின்வரும் வேத பகுதியில் எருசலேம் ஜனங்களின் உண்மையற்ற தன்மைக்கான நியாயத்தீர்ப்பை முடிவடையச் செய்யுமாறு தானியேல் தேவனிடம் வேண்டுகிறார்.

தலைவர்: தானியேல் 9:4-6, 15-19ஐ சத்தமாக வாசிக்கவும்.

- குழுவில் உள்ளவர்கள், ‘தேவனை’ குறிக்கும் இடங்களில் முக்கோணம் வரையவும்.
- ‘ஜெபத்தைக்’ குறிக்கும் இடங்களில் மற்றும் ‘விண்ணப்பங்கள்’ என்று வருமிடங்களிலும் “ஜெ” என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த ஜெபத்தில் தானியேல் குறிப்பிடுகின்ற தேவனின் மேன்மையான நற்பண்புகள் எவை?

- எந்த வாக்குத்தத்தங்களை நினைவு கூர்ந்து நிறைவேற்றும்படியாய் தானியேல் கர்த்தரை நோக்கி கூப்பிட்டான்?

- 18ம் வசனத்தின்படி, தானியேல் எதன் அடிப்படையில் அவனுடைய விண்ணப்பங்களை ஏறெடுத்தான்?

15. இப்போதும் உமது ஜனத்தைப் பலத்த கையினால் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி, உமக்குக் கீர்த்தியை உண்டாக்கின எங்கள் தேவனாகிய ஆண்டவரே, நாங்கள் பாவஞ்செய்து, துன்மார்க்கராய் நடந்தோம்.

16. ஆண்டவரே, உம்முடைய சர்வநீதியின்படியே, உமது கோபமும் உமது உக்கிரமும் உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேம் என்னும் உம்முடைய நகரத்தை விட்டுத் திரும்பும்படி செய்யும்; எங்கள் பாவங்களினாலும் எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும் எருசலேமும் உம்முடைய ஜனமாகிய நாங்களும் எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையானோம்.

17. இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும் கேட்டு,

பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.

18. என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.

19. ஆண்டவரே, கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்.

- இந்த வேதபகுதியிலிருந்து, உங்கள் சொந்த ஜெபவாழ்வில் அப்பியாசப்படுத்துவதற்கேதுவாய் நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

## உற்றுநோக்கு

நாம் இப்போது ஆராய்ந்த வேதபகுதிகள் தேவனுடைய வாக்குத்தத் தங்களையும் அவருடைய நற்பண்புகளையும் அறிந்த மனிதர்களின் துணிவான ஜெபங்கள் என்று நமக்கு காட்டுகிறது. தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பது அவருடைய சித்தத்தை புரிந்துகொள்வதற்கு உதவுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். இந்த மனிதர்கள் தேவனுடைய நற்பண்புகள், அவருடைய வாக்குத்தத்தங்கள், அதனால் அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்ளும் வரை தேவனிலும் தேவனுடைய வார்த்தையிலும் நிலைத்திருந்தார்கள். அவர்கள் தங்களுக்காக மாத்திரம் ஜெபிக்காமல் சுற்றிலும் உள்ளவர்களுக்காகவும் தேவனிடம் வேண்டிக்கொண்டதை கவனித்திருக் கிறீர்களா? அப்போஸ்தலனாகிய பவுலுடைய வார்த்தைகளிலும் இதே அக்கறைகுணம் வெளிப்படுவதை பார்க்கமுடியும்.

தலைவர் : எபேசியர் 1:15-19 வரை சத்தமாக வாசிக்கவும்.

- "உங்கள்", "உங்களுக்கு" என்ற வார்த்தைகளில் வட்டமிடவும்.
- "ஜெபங்கள்", "வேண்டுதல்" என்ற வார்த்தைகளில் "ஜெ" என்று குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- குறிப்பாக, ஒவ்வொரு வரிகளிலும் பவுல் இந்த ஜனங்களுக்காக ஜெபிப்பது என்ன?

- இந்த ஜெபம் தேவ சித்தத்திற்குட்பட்டது என்பதை நீங்கள் அறிந்துகொள்வதற்கான காரணங்கள் எவை?

**எபேசியர் 1 : 15 - 19**

15. ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு,

16. இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து,

17. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருள வேண்டுமென்றும்,

18. தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;

19. தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

- இந்த ஜெபம் நாம் பிறருக்காகவும், நமக்காகவும் ஜெபிப்பதற்கு எந்தமுறையில் மாதிரியாக உள்ளது?

## எபேசியர் 3 : 14 - 21

14. இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய,

15. நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு,

16. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,

17. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே

## உற்றுநோக்கு

தலைவர்: எபேசியர் 3:14-21ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'முழங்காற்படியிட்டு' என்ற வார்த்தையில் 'ஜெ' என்று குறிப்பிடவும்.
- 'நீங்கள்' 'உங்கள்' என்ற வார்த்தைகளை 'வட்டமிடவும்'.
- 'கர்த்தர்', 'பிதா', 'அவர்', 'அவருடைய', 'அவருக்கு' என்று தேவனை குறிக்கும் இடங்களில் 'முக்கோணம்' வரையவும்.

## கலந்துரையாடு

- குறிப்பாக ஒவ்வொரு வரிகளிலும் இந்த ஜனங்களுக்காக பவுல் ஜெபித்தது என்ன?

- இந்த ஜெபம் தேவசித்தத்தின்படியுள்ளது என்பதற்கு எந்த சான்றுகளை நீங்கள் காண்கிறீர்கள்?

- இந்த ஜெபம் நாம் பிறருக்காக மற்றும் நமக்காக ஜெபிப்பதற்கு எவ்விதத்தில் நமக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது?

வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,

18. சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;

19. அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

20. நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,

21. சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

## கொலோசெயர் 1 : 9 - 12

9. இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

10. சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

11. சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்.

## உற்றுநோக்கு

நம்முடைய போதனையின் முடிவு நேரத்தில், நம்முடைய தனிப்பட்ட ஜெபவாழ்க்கைக்கு மாதிரியாக இருக்கும் ஒரு வேதபகுதியையும் வேகமாக ஆராயலாம்.

தலைவர்: கொலோ 1:9-12ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'ஜெபம்', 'வேண்டுதல்' என்று வருகின்ற இடங்களில் 'ஜெ' என்று குறிப்பிடவும்.
- 'உங்களுக்காக' என்ற வார்த்தையை வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- குறிப்பாக ஒவ்வொரு வரிகளிலும் இந்த ஜனங்களுக்காக பவுல் ஜெபித்தது என்ன?

- இந்த ஜெபம் தேவசித்தத்தின்படியுள்ளது என்பதற்கு எந்த சான்றுகளை நீங்கள் காண்கிறீர்கள்?

- இந்த ஜெபம் நாம் பிறருக்காக மற்றும் நமக்காக ஜெபிப்பதற்கு எவ்விதத்தில் நமக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது?

12. ஒளியிலுள்ள
பரிசுத்தவான்களுடைய
சுதந்தரத்தில்
பங்கடைவதற்கு,
நம்மைத்
தகுதியுள்ளவர்களாக்-
கினவரும்,

## சுருக்கமாக

தேவன் நம் ஜெபத்தை உண்மையாக கேட்பதற்கு நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்ற கேள்விக்கான பதிலை பல கோணங்களில் ஆராய்ந்தோம். ஒரே ஒரு கேள்வி மீதமாயிருக்கிறது. அது "நீங்கள் ஜெபிக்கிறீர்களா?"

ஜெபம் தேவனுடைய பிள்ளையின் மிகவும் சாதாரண செயலாகும். சபைப்பாகுபாடில்லாமல் எந்த பிரிவாயிருந்தாலும் இந்த பொதுவான காரியத்தை நாம் கொண்டுள்ளோம். ஆனாலும் "மிகச் சிலரே உண்மையாக ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்", நீங்கள் ஜெபிக்கிறீர்களா?

ஜெபத்தினாலே வியாதியுள்ளவன் குணமடைவான், துன்மார்க்கன் மனந்திரும்புவான். ஜெபத்தினாலே புண்பட்டவர்கள் தேறுதலைடைவார்கள். மனம் சோர்வடைந்தவர்கள் உற்சாகமூட்டப்படுவார்கள். குழம்பிப்போனவர்கள் தெளிவுப்படுத்தப்படுவார்கள். "நீங்கள் ஜெபிக்கிறீர்களா?"

சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கை எங்கு போய்கொண்டிருக்கிறது என்று ஆச்சரியப்படுவது உண்டு. சில நேரங்களில் காரியங்கள் வித்தியாசப்படுவதற்கு நாம் விரும்புவதுண்டு. நாம் ஆச்சரியப்படுவதற்கும் விரும்புவதற்கும் பதிலாக "நாம் ஏன் ஜெபிக்கக்கூடாது?"

நாம் கேட்கும்போது தேவன் செயல்படுகிறார். ஆனால் நாம் கேட்கும்வரை அவர் செயல்படாமலிருப்பதாகத் தோன்றும். நீங்கள் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுக்கும் சூழ்நிலையிலும், உங்கள் இருதயத்தை எத்தகைய பாரம் ஆழ்த்தினாலும், நீங்கள் செய்யவேண்டியது தேவனோடு கிட்டிசேருவதும் அவரை நோக்கி கூப்பிடுவதும் ஆகும். "நீங்கள் ஜெபிப்பீர்களா?"

பின்வரும் பக்கங்களில் உங்களுக்காகவும், பிறருக்காகவும் ஜெபிப்பதற்கு வசதியாக வேதத்திலுள்ள ஜெபங்களை அமைத்திருக்கிறோம். அவைகளை பயன்படுத்துங்கள். தேவனோடு கிட்டிசேர அவர் உங்களை அழைக்கிறார். "நீங்கள் ஜெபிப்பீர்களா?"

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.
கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.
கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.

எண்ணாகமம் 6:24-26

## வேதாகமத்திலிருந்து சில ஜெபங்கள்

(பிறருக்காக நாம் ஜெபிக்கும் மாதிரி ஜெபம்)

எபேசியர் 1:17-19

பிதாவே! உம்மை "____________________"(பெயர்) அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை கொடுக்கவும் அவருடைய மனக்கண்களைத் திறக்கும்படிக்கும் அவரை நீர் அழைத்ததினாலே அவருக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும் பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் அவர்கள் அறிந்துகொள்ளவும், உமது வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களிடத்தில் காண்பிக்கும் உமது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று அவர்கள் அறிந்து கொள்ளும்படியாக அவர்களுக்கு பிராகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

எபேசியர் 3:16-19

பிதாவே! "____________________" உம்முடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் பலப்படவும், அதனால் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்து "____________________" இருதயத்தில் வாசமாயிருக்கவும் 'அவர்' அன்பிலே வேரூன்றி, நிலைபெற்று, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவராகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், உம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி அவர்களுக்கு அருள் செய்யும்படி உம்மை வேண்டிக் கேட்கிறேன்.

கொலோசேயர் 1:9-12

பிதாவே! "____________________" எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் நிரப்பப்படவும், அதனாலே அவர் உமக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து உம்மை அறிகிற அறிவில் விருத்தியடையப்பண்ணும்படி வேண்டிக் கேட்கிறேன். "____________________" சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும், நீடிய சாந்தமும் உண்டாவதற்கு மகிமையான உம்முடைய வல்லமையின்படி, உம்முடைய எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் வேண்டுகிறேன். ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு எங்களை தகுதியுள்ளவர்களாக்கினபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

பிலிப்பியர் 1:9-11

தேவனே! "______________________________" அவருடைய அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும் இன்னும் அதிகதிமாய்ப் பெருகவும், அதனால் அவர் உத்தமமானவைகளை ஒப்புக்கொள்ளும்படியாகவும், தேவனுக்கு மகிமையும், துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்து அவன்/அவள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவரும், இடறலற்றவாராயும் இருக்க வேண்டுதல் செய்கிறேன்.

2தெசலோனிக்கேயர் 1:11,12

எங்கள் தேவனும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து அளிக்கும் கிருபையின்டபடியே, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் "______________________" டத்திலும், "____________________" தேவனிடத்திலும் மகிமைப்படும் பொருட்டாக, எங்கள் தேவனாகிய நீர் "______________________" ஐ உம்முடைய அழைப்புக்கு பாத்திரராகவும், உம்முடைய தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையும் அவரிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் "______________________"க்காக வேண்டிக்கொள்கிறேன்.

2 தெசலோனிக்கேயர் 2:16,17

எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், எங்களிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் கிருபையாய் எங்களுக்கு கொடுத்திருக்கிற எங்கள் பிதாவாகிய தேவனும், எங்கள் இருதயங்களை தேற்றி, எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் "____________________________" ஐ ஸ்திரப்படுத்துவீராக.

2 தெசலோனிக்கேயர் 3:1,2

கடைசியாக பிதாவே! ஆதித்திருச்சபையில் பரவி மகிமைப்பட்டது போல இன்று உம்முடைய வசனம் எல்லா இடங்களிலும் சீக்கிரமாய் பரவி மகிமைப்படும்படிக்கும், விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லாததால் துர்க்குணராகிய பொல்லாத மனுஷரினின்று நாங்கள் விடுவிக்கப் படும்படிக்கும், அருள் செய்யும்படி ஜெபிக்கிறேன்.

## ஆசிரியர் மற்றும் இந்த ஊழியங்களைக் குறித்து

கே ஆர்தர் ஒரு சர்வதேச வேத போதகராக, ஆசிரியராக, கருத்தரங்கு பேச்சாளராக உலக முழுவதிலும் அறியப்பட்டுள்ளார். மேலும் 'பிரீசெப்ட் ஃபார் லைப்' என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலக முழவதிலும் சந்தித்துள்ளார். நான்கு முறை 'தங்க பதக்க விருதின்' ஆசிரியராகவும், 100 -க்கும் மேற்பட்ட புத்தககங்கள் , மற்றும் வேத பாடங்களுக்கு ஆசிரியராகவும் உள்ளார்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் (PMI), 1970 -ல் கே மற்றும் அவர் கணவர் ஜேக் என்பவர்களால் சாட்டனூகா, டென்னிஸியி -ல் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டவேண்டும் என்ற தரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த ஊழியம் உலகமுழவதும் சென்று அடைந்துள்ளது. இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகுழுக்களை அமெரிக்கா முழுவதும் கொண்டுள்ளது. PMI ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்து மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டு கொள்ள பயிற்றுவித்துள்ளது.

டேவிட் மற்றும் பி.ஜெ லாசன், பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனலில் 1980 முதல் பணியாற்றி வருகிறார்கள். ஒன்பது வருட மேய்ப்பர் பணிக்குப்பின்பு PMI -ல் முழநேரமாக மாணவர் ஊழியங்களின் இயக்குனராகவும், அதிலுள்ள ஊழியர்களுக்கு பயிற்றுநராகவும் உள்ளார்கள். PMI கருத்தரங்குகள் மற்றும் 'கட்டளையின் மேல் கட்டளை ' (PUP) வீடியோவில் சிறப்பு பேச்சாளராகவும், PUP, NIIS மற்றும் 40 நிமிட வேதபாடங்கள் தொடரிலும் டேவிட் எழதுகிறார். BJ எண்ணற்ற 40 நிமிட வேத பாடங்களில் எழுதியும், இத்தொடர்களின் தலைமை பதிப்பாளராகவும், முன்னேற்ற பணியிலும் உள்ளார். இதனுடன் PMI-ன் பெண்கள் கருத்தரங்குகளில் சிறப்புப் பேச்சாளராகவும் உள்ளார்.

உங்கள் பகுதியில் வேதத்தை பகுத்தாராயும் (Inductive Bible Study) பயிற்சிகளுக்கான கூடுதல் விவரங்களுக்கு பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா -ஐ தொடர்புகொள்ளவும்.

**Precept Ministries Society of India**
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092, India
Tel.No: +91-22-65333302
E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

# No-Homework Bible Studies

## That Help You Discover Truth For Yourself




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*

***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***

40 MINUTE BIBLE STUDIES

# No-Homework
## That Help You




*Available in Hindi also (shortly available in Tamil, Telugu & Malayalam)*




*Available in Hindi also (shortly available in Tamil, Telugu & Malayalam)*




*Available in Hindi, Malayalam and Telugu also (shortly available in Tamil)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*




*(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)*












# Bible Studies

## Discover Truth For Yourself




*Available in Hindi, Tamil, Kannada & Bengali also (shortly available in Telugu and Malayalam)*




*Available in Hindi and Malayalam also (shortly available in Tamil & Telugu)*




*Available in Hindi and Malayalam also (shortly available in Tamil & Telugu)*



















***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***

# Other powerful study series

## New Inductive Study Series

This powerful series contains 13-week long studies and is ideal for personal study, small groups, Sunday school classes, family devotions and discipling others.

*Available in Hindi also*







*Available in Hindi also*

*Available in Hindi also*







## Devotional & Study Tools




*Available in Hindi also*









## The Lord Series

The Lord series provides insightful, warm-hearted Bible studies designed to meet you where you are - and help you discover God's answers to your deepest needs.










***Available in Hindi, Malayalam, Telugu, Tamil & Kannada also***




## Bible Study for Kids

The Discover 4 Yourself Inductive Bible Studies for Kids help you find out for Yourself what the Bible is all about – and give you exciting ways to do it!













***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***



## உங்கள் ஜெபத்தை தேவன் கேட்கிறார் என்ற நிச்சயம் உண்டா?

உங்கள் ஜெபத்தைக் கேட்டு தேவன் உங்களுக்கு பதிலளிக்கும்போது நீங்கள் சில நேரங்களில் ஆச்சரியப்படுகிறீர்களா? உங்கள் ஜெபத்தின் முக்கியக் கருத்து என்ன என்பதை உங்களை நீங்களே கேட்டிருக்கிறீர்களா? உங்கள் ஜெபவாழ்க்கையில் ஜெபத்தின் வல்லமையை அனுபவிக்க வாஞ்சிக்கிறீர்களா?

உங்களைக் குறித்த தேவனுடைய எதிர்பார்ப்பையும் நீங்கள் ஜெபத்திற்கு வரும்போது அவர் கொடுக்கும் வாக்குத்தத்தங்களையும் வெளிப்படுத்துகிற, ஈர்க்கிற இந்த போதனையின் போது வல்லமையான ஜெபத்திற்காக திறவுகோல்களை கண்டறியவும் கர்த்தரின் ஜெபத்தையும் வேதத்திலுள்ள மற்ற ஜெபத்தின் எடுத்துக்காட்டுகளையும் விரிவாக ஆராய்வதன் மூலம் தேவனோடு பேசுவதற்கான மாதிரியை நீங்கள் கண்டுகொள்ள முடியும். ஜெபத்தின் முக்கிய தத்துவங்களை நீங்கள் கற்றுக்கொள்ளவும், ஜெபம் தேவனுடைய இருதயத்திற்கு உங்களை எவ்வாறு நெருங்க செய்யும் என்பதைக் குறித்த ஆழமான புரிந்துகொள்ளுதலை பெற்றுக்கொள்ளவும் முடியும்

40 நிமிட வேத பாடம்

**வாரத்திற்கு 40 நிமிடங்கள் உங்கள் வாழ்கையை மாற்றக் கூடும்!**
பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் குழுவினரின் இந்த 40 நிமிட வேதபாட தொடரானது, உங்களை முக்கியமான தலைப்புகளில் ஊக்கத்துடன் செயல்படவைக்கிறது. இந்த பகுத்தாராயும் முறை வழிகாட்டியானது, வீட்டுப் பாடங்கள் இல்லாமல் வெறும் ஆறு 40 நிமிடங்களில் பாடங்களை முடிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது, நீங்களாகவே ஆராயும்படி தேவன் என்ன சொல்லுகிறார் மற்றும் எப்படி உங்கள் இன்றைய வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடும் என்றும் உங்களுக்கு உதவிடுகிறது. புத்தகத்தின் வலதுபுறத்தில் அதன் குறிப்பிட்ட வேத வசனங்களுடன் நடத்துபவரின் குறிப்புகளும் உள்ளது, சுயமாகக் கற்கும் ஒவ்வொரு பாடங்களும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சிறுகுழு கலந்துரையாடலுக்கும் ஒரு வல்லமையான மூலாதாரமாகும்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் 1970-ல் ஜேக் மற்றும் கே. ஆர்தரால் ஆரம்பிக்கப்பட்டது, இலட்சக்கனக்கான மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டுகொள்ள பயிற்றுவித்துள்ளார்கள். Precepts for Life என்ற ரேடியோ மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலகமுழுவதும் சந்தித்துள்ளார்கள். இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிற்சி பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் அமெரிக்கா முழுவதும் கொண்டுள்ளது. PMI ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்துள்ளது.

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org